Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

English Academy
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
Better Place For Your Children
(சி-569)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 11 (14.02.2003) வெள்ளிக்கிழமை இதழ் :135

# மாநகரசபை கூண்டோடு ராஜினாமா; யாழ். நூலகத் திறப்பு விழாவும் ரத்து!

## நேற்று மாலை நடைபெற்ற அவசரக் கூட்டத்தையடுத்து முடிவு

(யாழ்ப்பாணம்)

**யாழ். பொதுசன நூலகம் இன்று திறக்கப்படவிருந்ததையடுத்து ஏற்பட்ட சர்ச்சையினால் யாழ். மாநகர சபையின் மேயர் கந்தையன் உட்பட இருபத்திமூன்று மாநகரசபை உறுப்பினர்களும் தமது பதவிகளை நேற்றுமாலை இராஜினாமாச் செய்தனர். யாழ். நூலகத் திறப்பு விழாவும் ரத்தாகியுள்ளது.**

யாழ்.மாநகரசபையின் நிர்வாகத் திற்குட்பட்ட யாழ். பொதுசன நூலகத்தை - மாநகர சபையினர் தீர்மானித்ததன் பிரகாரம் திட்டமிட்டபடி திறக்காமல் தொடர்ந்தும் மாநகர சபையினர் பதவியிலிருப்பது பயனற்றது எனத் தெரிவித்து, யாழ். மாநகர சபை முதல்வரும் உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

இவ்விடயம் தொடரபாக நேற்று மாலை யாழ். மாநகர சபையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். மாநகரசபை முதல்வர் கந்தையன் தெரிவித்திருப்பதாவது,

நாம் கடந்த காலங்களில் பாரிய சிரமங்களின் மத்தியிலும் எவ்வளவோ முயற்சிகள் செய்துதான் பொது நூலகத்தைப் புனரமைத்துள்ளோம். இந்நிலையில் பொது நூலகத்தின் புனரமைப்பு வேலைகள் எல்லாம் நிறைவடைந்த நிலையில் திறப்புவிழாவை நடாத்தத் தீர்மானித்து அதற்கும் நாள் குறித்தோம்.

பின்னர் திறப்பு விழாவிற்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)



ராஜினாமாவை அறிவிக்கிறார் மேயர் செல்லன் கந்தையன்.

## விசேட ஆணையாளர் யார்?

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாநகர சபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட இருப்பவர் யார் என்பது குறித்து இன்று திருகோணமலையில் விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் மாகாண ஆளுநர் உட்பட வட-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் சி.ரங்கராஜா மற்றும் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். மாநகர சபையின் மேயர் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் நேற்று ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து, இன்றைய மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது. (க)

## மானிப்பாய் சம்பவம்; ஆட்சேபித்து மகஜர்!

### கண்காணிப்புக் குழுவிடம் கையளிப்பு



மானிப்பாயில் நடைபெற்ற சம்பவத்தைக் கண்டித்தும் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்தக்கோரியும் யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினரால் மகஜர் ஒன்று யாழ். மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளிக்கப் பட்டது.

நேற்று மதியம் 12.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுதிரண்ட நூற்றுக்கும் மேற்பட்ட யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினர், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பல பொதுமக்கள் அங்கிருந்து மூன்று பஸ்களில் யாழ். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்திற்குச் சென்று தமது எதிர்ப்பை (10 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் மீதான தாக்குதல்; கண்டித்து இன்று யாழில் பேரணி!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து இன்று யாழ்.நகரில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவை உட்பட குடாநாட்டின் பல பொது அமைப்புக்கள் இணைந்து மேற்படி கண்டனப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளன.

இன்று காலை 9.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக முன்றலில் இருந்து இக்கண்டனப் பேரணி ஆரம்பமாகவுள்ளது. பலாலி வீதியூ


(10 ஆம் பக்கம் பார்க்க)

## லிப்ட், குளிரூட்டி வசதிகள் நூலகத்துக்கு கோருவது சரியா

### கேட்கிறார் ஆனந்தசங்கரி

யாழ். பொதுநூலகத் திறப்பை சமாதான முயற்சிகளுக்குக் குந்தகமாக்கி,ஒரு இரத்தக்களரி உருவாக நான் காரணமாக இருக்க விரும்பவில்லை என்பதை மாநகரசபை முதல்வர் செ.கந்தையனுக்கும் மாநகரசபை உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தி இத்திறப்பு விழாவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர்கள் இந்நிகழ்வை ரத்துச் செய்யத் தீர்மானித்தனர் என தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி - பொதுநூலகத் திறப்பு ரத்து தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஏசி காரும் கொழும்பு வாசமும் இப்படி எல்லாக் கேள்வியுந்தான் கேக்கச் சொல்லும்...!

## பெண்போராளிகள் மீதான தாக்குதல் சகிக்கமுடியாத ஆத்திரமூட்டும் செயல்

### அன்ரன் பாலசிங்கம் கடுமையாகச் சாடல்



மானிப்பாயில் நிராயுதபாணிகளாகச் சென்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மீது ஸ்ரீலங்காப் படையினர் நிகழ்த்திய மிருகத்தனமான தாக்குதல் சகிக்கமுடியாத ஆத்திரமூட்டும் செயலென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஐ.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுமாயின் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கமே பொறுபேற்க வேண்டும் எனவும் அன்ரன் பாலசிங்கம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இந்தச் சம்பவத்தில் பெண் (10 ஆம் பக்கம் பார்க்க)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
இன்றைய ஆட்டம்
ICC Cricket World Cup
இலங்கை Vs பங்களாதேஷ் - பீட்டர்மரிட்ஸ்பேர்க் ஓவல் - 2 மணி

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி -518)

# கண்ணீர் அஞ்சலி

## சுந்தரம் சின்னத்தம்பி

(மந்துவில்) (இளைப்பாறிய அதிபர்)

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!

அம்பிகா மருந்துச்சாலை,
அ-9 வீதி, சாவகச்சேரி.
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

(243)


## மாநகரசபை ஊழியர் எதிர்ப்பு

இன்று நடைபெறுவதாகவிருந்த நூலகத் திறப்புவிழா தொடர்பில் தாமும் அதனைப் புறக்கணிப்பதாக தெரிவிக்கும் துண்டுப்பிரசுரங்களை மாநகர சபை ஊழியர்கள், யாழ்.நகரிலும் மாநகர சபை அலுவலகச் சூழலிலும் நேற்று விநியோகித்தனர்.

மக்களின் விருப்பத்துக்கு மாறாக நடைபெறவுள்ள விழா என்பதாலேயே தாம் அதனைப் புறக்கணிப்பதாகவும் அதனைத் தவிரத் தாம் அரசு ஊழியர்கள் என்ற நிலையில் கடமைப் பொறுப்புகளை மட்டுமே செய்வதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டது. (13)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு உண்டு

காரைநகர் பஸ் டிப்போவிற்கு அருகில் 7 பரப்புடன் 4 அறை, வரவேற்பறை சமையலறையுடன் கூடிய புதிய கல்வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு:- வி.ஸ்ரீ சக்திவேல், 45 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். T.P:- 0212222797. (241)

### பல்கட்டுதல்

பல்கட்டுதல், பல்கிளிப்போடுதல் நல்ல முறையில் நியாய விலையில் மேற்கொள்ளலாம். கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறலாம். (மொறாயஸ்) ஒளிச்சுடர், பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி/585)

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
மாதவன், மீரா ஜஸ்மின் நடித்த
ரன்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
THE MUMMY RETURNS
(சி-544)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தினவெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா



10.30, 2.30, 6.00, 9.30 (சி-545)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.


# அதிர்ஷ்ட வாரம்

## 14.02.2003 - 20.02.2003

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

விபத்துக்கள் அல்லது வெட்டுக் காயங்களினால் கஷ்டமுண்டு. மனப் பயத்தை கொடுப்பதுடன், வீண் வம்புகளிலும் மாட்டிக் கொள்வீர்கள். அவதானம் தேவை. பொருள் வரவுக்கு இடமுண்டு. பிரயாணத்தால் கஷ்டத்தை கொடுத்தாலும் நன்மையையும் கொடுக்கும். வியாபரிகளுக்கு சமபலன் உண்டு. பெண்கள் அவதானமாக இருக்கவேண்டும். ஏமாற்றப்படலாம். மாணவர்கள் கல்வியில் பின்னடைவுகளைக் கொடுககும்.

### இடபம்

கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1,2ஆம் பாதம்

இடமாற்றம், பிரயாணங்களை கொடுக்கும். அதிக பிரயாசையும், சொற்ப பலனும் கிடைக்கும். மனதில் இனம்புரியாத வேதனை இருக்கும். தெளிவற்று இருப்பீர்கள். தலைவலி, சளி சம்பந்தமான நோயை கொடுக்கும். வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படலாம். அதிக முதலீடுகளை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு குடும்பசுகம் உண்டு. இருப்பினும் இடையிடையே சச்சரவுகளை கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

### மிதுனம்

மிருகசீரிடம், 2,3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1,2,3 ஆம் பாதங்கள்

தொழிலில் அதிக முன்னேற்றத்தையும், சிறப்புக்களையும் எதிர்பார்க்கலாம். உறவினர் நண்பர்களால் உதவி கிடைக்கும். குடும்பச் சிறப்பு, மகிழ்ச்சி போன்றன உண்டு. வெளியூரிலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. பெற்றோர் பிள்ளைகளால் பெருமையடைவர். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளில் ஈடுபடலாம். பெண்களுக்கு குடும்பத்தில் அமைதியும், நிம்மதியும் காணப்படும். கணவன் பிள்ளைகளின் ஆதரவு உண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக சிரத்தை காட்டுவார்கள்.

### கர்க்கடகம்

புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உடலில் ஏதாவது ஒரு நோய் இருந்து கொண்டேயிருக்கும். உற்சாகமில்லாத தன்மையையும் கொடுக்கும். இருப்பினும் எடுத்த காரியத்தில் வெற்றியடைவீர்கள். தொழில் சிறப்பு உண்டு. பொருள் வரவை கொடுக்கும். வியாபாரிகளுக்கு அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. புதிய முதலீட்டை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு குடும்ப சுகமுண்டு. அமைதி நிலவும். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

### சிங்கம்

மகம், பூசம், உத்தரம், 1ஆம் பாதம்

வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக சந்தோஷமாக பணத்தை செலவு செய்வீர்கள். புதிய கொள்வனவுகள், காணி, பூமி சேர்க்கை, வாகனயோகமுண்டு. பெரியோர் மதிபபும் பொதுசன உதவியும் கிடைக்கும். சென்ற இடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். வியாபாரிகளுக்கு நல்லலாபம் கிடைக்கும். அதே வேளை கையில் பணம் கிடையாது. பெண்களுக்கு மகிழ்ச்சியான காலம். உறவினர் வருகையால் குதூகலம் காணப்படும். மாணவர்கள் ஞாபக மறதியால் அவஸ்தைப்படுவர்.

### கன்னி

உத்தரம், 2,3,4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1,2ஆம் பாதம்

வெளியூர்ப் பிரயாணங்களைக் கொடுக்கும். தொழிலால் அதிக நன்மைகளை எதிர்பார்க்க முடியும். இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படும். சளித் தொல்லை கொடுக்கும். பொதுசன மதிப்பு உண்டு. பூமி, வாகனம் இவற்றால் லாபமுண்டு. வியாபாரிகளுக்கு முதலீட்டிற்குரிய லாபம் கிடைக்கும். பெண்களுக்கு பொருள் வரவுக்கு இடமுண்டு. சந்தோஷம் காணப்படும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

### துலாம்

சித்திரை 3,4ஆம் பாதம், சுவாதி, விசாகம், 1,2,3ஆம் பாதம்

பொருட்செலவு, பொருள இழப்புக்களைக் கொடுக்கும். மனக் குழப்பம் இருக்கும். நண்பர்கள் உதவி செய்வர். வீண்பழி கேட்கவும் ஏமாற்றப்படவும் கூடும். பிரயாண கஷ்டமுண்டு. வியாபாரிகள் புதிய முதலீடுகளை தவிர்ப்பது நல்லது. பொருள் நஷ்டத்தைக் கொடுக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் நிம்மதியிராது. மாறி மாறி பிரச்சினைகளால் சுழலுவீர்கள். மாணவர்கள் மனச்சோர்வு, உடற்சோர்வு போன்றவற்றால் கல்வியில் பின்னடைவு காணப்படும்.

### விருச்சிகம்

விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

விவாகாதி சுபகாரியங்களுக்கு இடமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வெளியூரிலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. அன்னிய உதவி கிடைக்கும். வாகனயோகம் உண்டு. தொழில் சிறப்பும், முன்னேற்றமும் உண்டு. வியாபாரிகள் அதிக நன்மையடைவர். அதிக லாபம் கிடைக்கும். கொடுக்கல் - வாங்கல் திருப்தியாக இருக்கும். பெண்களுக்கு கணவனின் ஆதரவு இருக்கும். மாணவர்கள் கல்வியினால் முன்னேற்றமுண்டு.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

நன்மை செய்யப்போய் கெட்ட பெயர் எடுப்பீர்கள். பிரச்சினைகளை விட்டு விலத்தி நடப்பது நல்லது. வீண்பழி கேட்கலாம். எதற்கும் அவதானம் தேவை. முன்யோசனையுடன் செயற்பட்டால் அவமானத்தை தவிர்த்துக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு போட்டி அதிகரிக்கும். பிரச்சினைகளில் மாட்டிக்கொள்ளக் கூடிய காலம். பெண்களுக்கு குடும்ப சுகம் உண்டு. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமுண்டு.

### மகரம்

உத்தராடம், 2,3,4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதம்

திருமணப் பேச்சுக்கள் கைகூடும். நண்பர்கள், உறவினரால் உதவிகள் கிடைக்கும். பெண்களால் அதிக நன்மையடைவீர்கள். பணப் புழக்கம் அதிகமாக இருக்கும். எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும். வாகனம், பூமி இவற்றால் நன்மையுண்டு. வியாபாரிகள் நல்ல லாபமடைவர் புதிய முதலீடுகள் செய்யலாம். பெண்களுக்கு குடும்பசுகம் உண்டு மாணவர்கள் கல்வியில் பின்னடைவு காணப்படும்.

### கும்பம்

அவிட்டம், 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1,2,3ஆம் பாதம்

நண்பர்கள் பகைவராகக் கூடிய காலம். வீண்பழி. அவமானங்களைச் சந்திக்க நேரிடும். மனதில் விரக்தி காணப்படும். தொழிலில் அதிக அக்கறை செலுத்த முடியாது போகும். வியாபாரிகள் அவதானமாக இருக்கவேண்டும். இல்லையெனில் பொருள் நஷ்டத்தையும் வியாபாரச் சிக்கல்களையும் கொடுக்கும். பெண்களுக்கு தேகசுகம் நன்றாக இராது. நாரி நோ, இடுப்புவலி போன்றன இருக்கும். மாணவர்கள் கல்வியில் உற்சாகம் காட்டமாட்டார்கள்.

### மீனம்

பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

புதிய முயற்சிகள், புதிய முகங்கள், புதியன, புதியனவாக எல்லாம் கிடைக்கும். சந்தோஷமாக இருப்பீர்கள். தொழிலில் அமோக வெற்றி கிடைக்கும். நினைத்ததை நடாத்தி முடிப்பீர்கள். எல்லோருடைய ஆதரவும் இருக்கும். வியாபாரிகளுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். எதிர்பாராத அளவுக்கு வெற்றி கிடைக்கும். பெண்கள் அதிகம் நனமையடைவர். குடும்பசுகம் புத்திரரால் மகிழ்ச்சி கிடைக்கும். மாணவர்கள் கல்வியால் அதிக ஆர்வம காட்டுவார்கள்.

**பிரபல சோதிடர் எஸ். குகநேசன்**


MODERN EDUCATION CENTRE
NELLIADY
G.A.Q. துரித மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன
15.02.2003

| | |
|---|---|
| மெய்யியல் | - திரு. நவம் |
| அரசியல் | - திரு. மனோகரன் |
| பொருளியல் | - திரு. லோகசிங்கம் |
| | திரு. செல்வரட்ணம் |
| தமிழ் | - திரு. முரளி |
| நா. அரங்கியல் | - திரு. கனகேஸ்வரன் |
| இந்து நாகரிகம் | - திரு. ஜோதீஸ்வரன் |
| | திரு. மகிந்தன் |
| கிறிஸ்தவம் | - திரு. செபநேசன் |
| ஆங்கிலம் | - திரு. சண் |
| வர்த்தகம் | - செல்வி சிவரூபி |

அரசியல் - காலை 9.30 (ப.நே)
2005 A/L கலை, வர்த்தகப் பிரிவுகள்
நடைபெறுகின்றன
(சி-588)

ஒலிபரப்பாளர் அறிவிப்பாளர் பயிற்சி நெறி



1. ஒலிபரப்பு வரலாறு
2. தொடர்பியல்
3. அறிவிப்பு
4. செய்தி அறிக்கைத் தயாரிப்பு
5. செய்திவாசிப்பு
6. நேர்காணல்
7. நேர்முக வர்ணனை
8. மேடை நிகழ்ச்சித் தொகுப்பு
9. தயாரிப்பு
10. நிகழ்ச்சி அமைப்பு (தேசிய வர்த்தக விளம்பர நிகழ்ச்சிகள்)
11. கலையக இயக்கம்
12. கலையக பயிற்சி

இவையனைத்தும் எமது பாடத்திட்டத்தினுள் அடங்கும்.
அனுபவம் மிக்க ஒலிபரப்பாளர்கள் மூலம் கற்றுத் தரப்படும்.
காலம் 3 மாதம்
பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
ஒரு ஒலிபரப்பாளராக உருவாக ஆசைகொண்ட நீங்கள்
இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு உங்கள் இலட்சியத்தை இலகுவாக்குங்கள்
நீங்கள் பயிற்சிக்காக கொடுக்கும் பணத்தை உங்கள் திறமையால் மூன்றுமாதத்தில் மீளபெற வாய்ப்பு
December மாதம் புதியவகுப்புகள் ஆரம்பம்
Call: 074-512830
ரூபா 4.50 சதம் முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையுடன் சுயவிபரக்கோவையை அனுப்பவேண்டிய முகவரி.
Mass Media Institute of Ceylon
2nd Floor, "Colombo Plaza" (Adjoining Wellawatte Mosque)
50, Galle Road, Colombo - 06.
S.K.Ads&Prints Sujee

DIPLOMA IN MASS MEDIA
தபால் மூலம் ஊடக டிப்ளோமா பயிற்சி நெறி
வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை மற்றும் வெகுஜன ஊடகங்கள் பற்றிய கற்கையும் இறுதியில் கலையக பயிற்சியும் வழங்கப்படும்
பயிற்சிக் காலம் 6 மாதம்
உலகெங்கும் வாழும் ஈழத்தமிழரும், தொழில் புரிவோரும், இல்லத்தரசிகளும் பயிலலாம்
பரீட்சை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
M.M.I.C மாணவர்கட்கு சலுகைகள் உண்டு
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :
தபால் மூலம் ஊடக டிப்ளோமா பயிற்சி நெறி
Mass Media Institute of Ceylon
2nd Floor, "Colombo Plaza", 50, Galle Road, Colombo - 06.
S.K.Ads&Prints Sujee

# எனக்கு நெடுந்தீவு சம்பவம் தொடர்பாக

# ஜனாதிபதி எந்த உத்தரவும் வழங்கவில்லை

## மறுக்கிறார் பாதுகாப்பு அமைச்சர்

நெடுந்தீவுக் கடலில் கடற்புலிகளின் மீன்பிடி வள்ளத்தைத் தடுத்து வைத்திருந்தபோது - தான் விடுத்த உத்தரவை நிறைவேற்றப் பாதுகாப்பு அமைச்சர் தவறிவிட்டார் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்த குற்றச்சாட்டைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக திலக் மாரப்பன அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கின்றார். அதில், நெடுந்தீவுச் சம்பவம் தொடர்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எந்த உத்தரவையோ, ஆலோசனையையோ வழங்கவில்லை.

இப்படியிருக்கத் தான் உத்தரவிட்டும் நான் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறியிருப்பது வியப்பளிக்கின்றது எனத் திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளார்.



நெடுந்தீவுச் சம்பவத்தில் தான் விடுத்த உத்தரவுகளை திலக் மாரப்பன நிறைவேற்றவில்லை என்றும், இதனாலேயே நெருக்கடிகள் மோசமடைநததாகவும் முன்னதாக ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# குடாநாட்டில் கண்ணிவெடி அகற்ற நெதர்லாந்து அரசாங்கம் நிதியுதவி!

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளுக்காக நெதர்லாந்து அரசாங்கம் 4 லட்சத்து 65 ஆயிரம் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது.

குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள 'ஹலோ ட்ரஸ்' அமைப்பு மூலம் இந்த நிதி செலவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த செப்ரெம்பர் மாதம் நெதர்லாந்து நாட்டின் அபிவிருத்தி ஒத்துழைப்பு அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையிலேயே, இந்த நிதியுதவி வழங்கபபட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நெதர்லாந்தின் நிதியுதவியுடனான கண்ணிவெடி அகற்றும் பணிக்கு ஹலோ ட்ரஸ்ட் அமைப்பு 40 பேர் கொண்ட செயலணி ஒன்றை அமைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### மகளிர் தினத்தையொட்டி போட்டிகள்

மார்கழி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையமும், மகளிர் அபிவிருத்தி நிலையமும் போட்டிகளை நடாத்தவுள்ளன.

பாடசாலை ரீதியான பட்டி மன்றப் போட்டியும், சனசமூக நிலையங்கள், தொண்டர் நிறுவனங்கள் மற்றும் மகளிர் நிறுவனங்களுக்கிடையிலான நாடகப்போட்டியும் நடாத்தப்படவுள்ளன.

# அவுஸ்திரேலியாவிலுள்ள அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பவேண்டாம்

## அமைச்சர் சந்திரசேகரன் கோரிக்கை

அவுஸ்திரேலியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பவேண்டாம் என அமைச்சர் சந்திரசேகரன் அந்நாட்டு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதுவரைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இந்தக் கோரிக்கையை அவுஸ்திரேலிய அரசுககு முன்வைததுள்ளார்.

தற்போது நாட்டில் யுத்த நிறுத்தம் மட்டுமே ஏற்பட்டிருக்கிறது. இது நிரந்தரமான தீர்வல்ல. நிரந்தரத் தீர்வுககான பேச்சுக்களே நடந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் அவுஸ்திரேலியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புகின்ற எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டாம் என அவர் அவுஸ்திரேலியத் தூதுவரிடம் அவர் தெரிவித்துள்ளார்.

## புலிகள் - முஸ்லிம்கள் இடையிலான

# பிரச்சினைகள் தீர்க்கும் குழு அடுத்த வாரம் முதல் செயற்படும்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் - முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்க்கும் குழு அடுத்தவாரம் தொடக்கம் செயற்படவிருப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இது தொடர்பாக, அவர் மேலும் தெரிவித்ததாவது, இரு தரப்புப் பிரச்சினைகளைத் தீர்க்கும் குழு மட்டக்களப்பில் அடுத்தவாரம் முதல் செயற்படத் தொடஙகும்.

பேர்ளினில் நடந்த பேச்சுக்களின் போது, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதென் இணக்கப்பாடு காணப்பட்டது.

புலிகள், முஸ்லிம்களைத் தமது சொந்த இடங்களில் குடியேறலாம் என அறிவித்துள்ளனர்.

இதேவேளை, பேர்ளின் பேச்சுக்களின்போது முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் கூறப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் தமிழக ஊடகங்களின் 'கட்டுக்கதை'

## சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிக்கை

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாகவும், தாக்குதல் நடத்துவதாகவும், படகுகளை மூழ்கடிப்பதாகவும் வெளியாகும் தகவல்கள் தவறானவை என்று சென்னையிலுள்ள இலங்கைத் துணைத்தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்கவில்லை. ஆனால், அண்மைக்காலத்தில் இப்படியான தாக்குதல்கள் நடத்தப்படுவதாகத் தமிழகததிலுள்ள ஊடகங்கள்தான் செய்திகளை வெளியிட்டுவருகின்றன.

அண்மையில் கூட, இரண்டு மீன்பிடிப்படகுகளை, இலங்கைக் கடற்படை மோதி மூழ்கடித்ததாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. ஆனால், அப்படியானதொரு சம்பவமே நிகழவில்லை எனக் கடற்படைத் தளபதி அறிவித்திருப்பதாகவும் சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது.

(01)

# முப்படையினரின் சாகசக் காட்சிகள் கட்டுக்குருந்த விமானத்தளத்தில்!

முப்படைகள் மற்றும் பொலிஸாரின் சாகச நிகழ்ச்சிகளைக் கட்டுக்குருந்த விமானப்படைத்தளத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மார்ச் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் காலை 10 மணிமுதல் பி.ப.2 மணி வரை இந்தச் சாகச நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. இவற்றுள் விமானங்களின் சாகசக் ·காட்சி, வர்னிலிருந்து குதித்தல் போன்றன விமானப்படையினராலும் -

கடற்படையினரால் சமநிலை விசை சாகசக் காட்சிகளும், இராணுவக் கொமாண்டோக்களால் பரசூட் மூலம் குதித்தல், மாதிரி கொமாண்டோ தாக்குதல் காட்சிகளும்,

விசேட அதிரடிப்படையினரால் விசேட தாக்குதல் ஒத்திகையும் மற்றும் முப்படையினரின் நாய்களின் கண்காட்சியும், பாண்ட் இசை நிகழ்ச்சிகளும் இந்த நிகழ்வில் காண்பிக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# அரச சேவை தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்துக்கு ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதார, தொழிற் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ள அரசாங்க சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தொழிலாளர்களின் உரிமை மறுப்பு, ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படாமை, ஊழியர்களின் நியமனங்கள் பாதிப்பு, விலைவாசி உயர்வு என்பனவற்றை முன்னிறுத்தியே வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# நீதித்துறை அதிகாரங்களை அரசாங்கம் தெரிவுக்குழு மூலம் கட்டுப்படுத்த முயற்சி

## பொ.ஐ.மு.குற்றச்சாட்டு

நதித்துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் அரசாங்கம் கட்டுப்படுத்தப் பார்ப்பதாக எதிர்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி தொிவித்துள்ளது.

இது தொடர்பாக, எதிர்க்கட்சியன் பேசாளரான சரத் அமுனுகம தெரிவித்திருப்பதாவது,

ஏழு அமைச்சர்களுக்கு எதிரான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு கிடைத்திருக்கின்றன. இதனடிப்படையில் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்த விசாரணைகளைக் குழப்புகின்ற வகையில் ஆணைக் குழுவின் அங்கத்தவர் ஒருவருக்கு எதிராகக் குற்றச்சாட்டைச் சுமத்தி நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து விசாரிக்க அரசாங்கம் முனைகின்றது.

இந்த நடவடிக்கைக்கு பொ.ஜ.மு. ஒருபோதும் ஒத்துழைக்காது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் போன்றோர் கூட இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றார்கள் என சரத் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

(01)



தெல்லிப்பளை கலாசாரப் பேரவை நடாத்திய மகர விழா ஆரம்ப நிகழ்வில் - கலாசார ஊர்வலத்தில் ஒரு காட்சியை முதலாவது படத்திலும், மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் மங்கல விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களுடன் மேலதிக அரச அதிபரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : நி.மாதவன்
முகவரி: 104, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

நான்காவது அகவையில்



பெயர் : ஜெ.கிரிந்தகணேஸ்
முகவரி: 58, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : உ.பிரியலக்ஷன்
முகவரி: 9/2 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

ஐந்தாவது அகவையில்



பெயர் : வி.பகினா
முகவரி: புத்தூர் கிழக்கு, புத்தூர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## நல்லூர் கோட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்ட மட்டத்திலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் - நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் யா/கனகரட்ணம் ம.ம. வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

15 வயதுக்குட்பட்ட பிரிவில் செங்குந்தா இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யா/கனகரட்ணம் ம.ம.வித்தியாலய அணியும், 17 வயதுக்குட்பட்ட பிரிவின் செங்குந்தா இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யா/அரியாலை பார்வதி வித்தியாலய அணியும், 19 வயதுக்குட்பட்ட பிரிவில் யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய அணியை எதிர்த்து யா/கொககுவில் இராமகிருஷ்ண வித்தியாலய அணியும் விளையாடவுள்ளன.

## திருமுறை விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், கோவில்பற்று இந்து சமயவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருமுறைவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிககு மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி இ.சுப்பையாப்பிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்குப் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சணமுகதாஸ் ஆகியோரும்

சிறப்பு விருந்தினர்களாக ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(89)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இணுவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறும். (89)

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 19

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

நல்ல தரத்திலுள்ள தாவர உணவுகள் சிலவற்றின் சத்து விபரம் (கிராமில்)

| உணவுப்பதார்த்தம் | புரதச்சத்து | கொழுப்புச்சத்து | மாச்சத்து | கலோரி |
|---|---|---|---|---|
| அப்பிள் | 0.2 | 0.5 | 13.4 | 59 |
| வாழைப்பழம் | 1.2 | 0.3 | 27.2 | 116 |
| பீட்ரூட் | 1.7 | 0.1 | 8.8 | 43 |
| கொண்டடைக்கடலை | 20.8 | 5.6 | 59.8 | 372 |
| பாகற்காய் | 1.6 | 0.2 | 4.2 | 25 |
| உழுந்து | 24 | 1.4 | 59.6 | 347 |
| சுரைக்காய் | 0.2 | 0.1 | 2.5 | 12 |
| கரட் | 0.9 | 0.2 | 10.6 | 48 |
| தேங்காய் | 4.5 | 41.6 | 13 | 44 |
| கொத்தமல்லி | 14.1 | 16.1 | 21.6 | 288 |
| தயிர் | 3.1 | 4 | 3.9 | 60 |
| கறிவேப்பிலை | 6.1 | 1 | 18.7 | 108 |
| பேரீச்சம்பழம் | 2.5 | 0.4 | 75.8 | 317 |
| முருங்கைக்காய் | 2.5 | 0.1 | 3.7 | 26 |
| கத்திரிக்காய் | 1.4 | 0.3 | 4 | 24 |
| வெந்தயம் | 26.2 | 5.8 | 44.1 | 333 |
| இஞ்சி | 2.3 | 0.9 | 12.3 | 67 |
| திராட்சை | 0.5 | 0.3 | 16.5 | 71 |
| கொய்யாப்பழம் | 0.9 | 0.3 | 11.2 | 51 |
| பலாப்பழம் | 1.9 | 0.1 | 19.8 | 88 |
| வெண்டைக்காய் | 1.9 | 0.2 | 6.4 | 35 |
| எலுமிச்சம்பழம் | 1.5 | 1 | 10.9 | 59 |
| தேன் | 0.3 | - | 79.5 | 319 |
| மாம்பழம் | 0.6 | 0.4 | 16.9 | 74 |
| பசுப்பால் | 3.2 | 4.1 | 4.4 | 67 |
| கடுகு | 20 | 39.7 | 23.8 | 541 |
| வெங்காயம் | 1.2 | 0.1 | 11.1 | 50 |
| தோடம்பழம் | 0.7 | 0.2 | 10.9 | 48 |
| பப்பாளி | 0.6 | 0.1 | 7.2 | 32 |
| அன்னாசிப்பழம் | 0.4 | 0.1 | 10.8 | 46 |
| மாதுளம்பழம் | 1.6 | 0.1 | 14.5 | 65 |
| உருளைக்கழங்கு | 1.6 | 0.1 | 22.6 | 97 |
| எள்ளு | 18.3 | 43.3 | 25 | 563 |
| கோதுமைமா | 12.1 | 1.7 | 69.4 | 341 |
| குத்தரிசி | 7.5 | 1 | 76.7 | 346 |
| புடலங்காய் | 0.5 | 0.3 | 3.3 | 18 |
| துவரம்பருப்பு | 22.3 | 1.7 | 57.6 | 335 |

இதில் தரப்பட்டுள்ள அளவுகள் அண்ணளவானவை. சத்துகளின் அளவைத் துல்லியமாக அறிய விரும்புவோர் உணவு நிபுணரிடம் (DIATICIAN) உசாவுக.

(தொடரும்)



நமது ஈழநாடு வழங்கும்





# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்
[இரத்தின கோபாலரின் இணைந்த நிறுவனம்]
32, சிறாம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும் நவீன இயந்திரங்களினால் சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)
3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 222 2938
டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும், இயந்திரங்கள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: சந்திரா மல்ரிகோப்பரேட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து
பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (......................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (......................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (......................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (......................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (......................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக


'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.


பெயர்: ..........................................
வயது: ..........................................
முகவரி: ..........................................



சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.




# இதயங்களைப் பரிமாறிக் கொண்டவர்களின் வருடாந்த அன்புக் கொண்டாட்டம்





**காதலுடன் கூடிய வாழ்க்கைப் போராட்டம் அழகானது, ஆழமானது, அர்த்தமானது.**


சர்வதேச ரீதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன.

அதாவது, சிறுவர் தினம், முதியோர் தினம், மகளிர் தினம் எனப் பல தினங்கள் கொண்டாடப்படுகின்றன. இந்தத் தினங்களில் மேடை போட்டு அவை பற்றிப் பல பெரியார்கள் முழங்கித் தள்ளுவார்கள். ஆனால், காதலர் தினம் மட்டும் உள்ளங்களைப் பரிமாறிக்கொண்டவர்கள் மட்டும் கொண்டாடி மகிழும் ஒரு தினமாகும்.

பருவ வயதையடைந்த ஆணும், பெண்ணும் எதிர்காலத் துணையைத் தெரிவுசெய்து வாழ்த்துக்கூறும் ஒரு நாளாகவே காதலர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. எனினும் பெரும்பாலும் காதலர்களாக உள்ளவர்களே காதலர் தினத்தைக் கொண்டாடி மகிழ்வது வழமை.

இந்தக் காதலர்தினம் உருவானது பற்றிப் பல சுவையான கதைகள் உள்ளன.

காதலர் தினம் இங்கிலாந்து, பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகளில் தோன்றிப் பின் உலகம் முழுவதும் பரவியதாகவே கூறப்பட்டு வருகிறது.






ரோமானியப் பேரரசர் இரண்டாம் கிளர்டிஸ் என்பவர் தனது ஆட்சிக் காலத்தில் போர் வீரர்கள் திருமணம் செய்யக்கூடாது எனத் தடை விதித்திருந்தாராம். எனினும் அதற்கு எதிராகப் போராடிய 'வெலன்ரைன்' பாதிரியார் அரசின் தடை உத்தரவையும் மீறிப் போர் வீரர்கள் காதலித்த பெண்களைத் திருமணம் செய்து வைத்தாராம். இதனால், வெலன்ரைன் பாதிரியார் கொலை செய்யப்பட்டார். இவ்வாறு அவர் கொலை செய்யப்பட்ட தினமான பெப்ரவரி 14 ஆம் திகதியை நினைவு கூரும் முகமாவே அன்றைய தினம் காதலர் தினமாகக் கொண்டாடப்படுகிறது எனவும் கூறுவர்.

இது தவிர - ரோம் நகரில் வாழ்ந்த மற்றொரு வெலன்ரைன்ஸ் சிறுவர் சிறுமியரோடு அன்பாக நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தாராம். ஆனால், வெலன்ரைன்ஸ் கடவுளை வணங்க மறுத்து வந்ததாகவும், இந்தக் குற்றத்திற்காக வெலன்ரைன்ஸ் என்பவர் சிறையில் அடைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு வெலன்ரைன்ஸ் சிறையில் அடைக்கப்பட்டதைத் தாங்க முடியாத சிறுவர், சிறுமியர்கள் தமது அன்பை வெளிப்படுத்துவதற்காகப் பெருந்தொகையான வாழ்த்து மடல்களை சிறைக்கு அனுப்பினார்களாம். இது எப்படியோ காதலர் தினமாக மாறித் தமது இதயங்களைக் கவர்ந்தவர்களுக்கு வாழ்த்து அட்டை அனுப்புவதாக மாறியதாகவும் கூறப் படுகிறது.

இங்கிலாந்து நாட்டில் பறவைகளால்தான் காதலர் தினம் உருவானதாம். இது எப்படி எனச் சிந்திக் கிறீர்களா? பறவைகள் பெரும்பாலும் பெப்ரவரி மாதத்தில்தான் தமது துணையைத் தேடிக்கொள்வதாக இங்கிலாந்து நாட்டவர்களிடம் ஒரு நம்பிக்கை உண்டு. அந்த வகையிலே தமது எதிர்காலத் துணையைத் தேடும் காதலர் தினம் உருவானதாகவும் கூறப்படுகிறது. இது போலவே ஏனைய நாடுகளிலும் காதலர் தினம் உருவானது பற்றி வேறுப்பட்ட பல கதைகள் கூறப்படுகிறது.

எது எப்படியோ காதலர் தினம் கொண்டாடப்படும் விதம் நாட்டுக்கு நாடு வேறுபட்டே காணப்படுகிறது.

இத்தாலி நாட்டில் ஆரம்ப காலத்தில் காதலர் தினம் கொண்டாடப்பட்ட விதம் விநோதமானது. இந்நாட்டுப் பெண்கள் காலையில் எழுந்தவுடன் ஜன்னல ஓரமாக நின்று கொள்வார்களாம். இப்படி நிற்கும்போது முதலில் எந்த ஆணைப் பார்கிறார்களோ அவனைத்தான் தன் காதலனாகத் தெரிவுசெய்வார்களாம். (தற்செயலாக இவர்கள் முதலில் காணும் ஆண் முதியவராகவே அன்றி மணம்முடித்தவராகவோ இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்?)

பல நாடுகளைச் சேர்ந்த அதிகமான காதலர்கள் - காதலர் தினத்தன்றே திருமணம் செய்து தமது மணவாழ்வை ஆரம்பிப்பது உண்டு. அதேபோலவே பல இளைஞர்களும், யுவதிகளும் தமது மனங்கவர்ந்தவர்களிடம் முதன்முறையாக இந்தத்தினத்தன்றே தமது காதலைத் தெரிவித்துக்கொள்வார்கள்.

மேலைநாடுகளிலே தோன்றிய காதலர் தினக் கொண்டாட்டங்கள் அண்மைக்காலமாக ஆசிய நாடுகளிலும் பரவியுள்ளது.

பெப்ரவரி 14 ஆம் திகதி காதலர் தினமாகக் கொண்டாடப்பட்டாலும் - காதலர்களுக்கு எந்நாளும் காதலர்தினம்தான். காதல் என்பது ஏற்றுக்கொள்ளப்படும் வரை போராட்டமாகத்தான் இருக்கிறது. புனிதமான காதலுக்காக காக்க வைப்பதிலும் - காத்திருக்க வைப்பதிலும் சுவையான சுகம் உண்டு. அது நம்பிக்கையிலும், புரிந்துணர்விலும் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். வாழ்க்கையே ஒரு போராட்டம். அது வெறும் போராட்டமாக இருப்பதை விட காதலுடன் கூடிய போராட்டமாக அமையும்போது அங்கு ஓர் அழகான, ஆழமான அர்த்தம் இருக்கிறது. எனவே காதலில் வென்று வாழ்க்கையை வெல்லுங்கள். ◎

**- அபிநயா.**

## அன்பின் சிந்திக்கு

## மனந் திறக்கும் ஒரு மடல்




சிந்தி,

நேற்று நான் சசிகலாவைச் சந்தித்து உரையாடியபின் அதுபற்றி உனக்கு எழுதவேண்டுமெனக் கருதியதால் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

சசிகலாவின் மகள் கராத்தே பழகவிரும்புகிறாளாம். இதற்கு அவளது தந்தை அதாவது சசிகலாவின் கணவன் ஒத்துக்கொள்ள மறுக்கிறாராம்.

என்ன காரணம் என்று கேட்டேன் "சற்று வாயாடியான பெண்பிள்ளைகளையே திருமணம் செய்து கொடுப்பது கஷ்டம். கராத்தே பழகிய பெண்ணென்றால் ஒருவரும் திருமணம் செய்ய முன்வரமாட்டார்கள். ஆகையால் வேண்டாம்." என்பது அவரது விளக்கம்.

மகளோ "தற்பாதுகாப்பிற்காகத்தானே இதைப் பயில விரும்புகிறேன். தனியாகவும் ஓரிடமும் போக முடியாது. ஜனநெரிசலிலும் அது கோவிலாக இருந்தால்கூட போக முடியாது. கராத்தே பயின்றிருக்கிறேன் என்பது தெரிந்தாலே பின்பு அதிகம் வாலாட்டமாட்டார்கள். நானென்ன கணவனுடன் சண்டைபிடிக்கவா இதைப் பயிலப் போகிறேன்?" என்று விவாதிக்கிறார்களாம்.

சிந்தி, பெரும்பான்மையான ஆண்கள் மனைவியையோ மகளையோ பிரச்சினைகளின்போது காப்பாற்ற முடியாதவர்களாகத்தானிருக்கிறார்கள். இதில் பெண்களில்தான் தவறென்று பல்வேறு குற்றங்களையும் சுமத்திக் குற்றவாளியாக்கிவிடுவார்கள்.

இப்படியான சமுதாயத்தில் பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள விரும்புவது தவறல்லவே.

யாருமே துணைக்கு இல்லாது தனியாக இருக்கவேண்டிய எத்தனையோ சந்தர்ப்பங்கள் பெண்களுக்கேற்படுகின்றன. தான் அருகிலிருக்கும்போது தன்னால் மற்றவர்களைக் காப்பாற்ற முடியும் எனக் கருதும் ஆணின் மனைவிக்கோ பிள்ளைகளுக்கோகூட இத்தகைய சந்தர்ப்பங்களில் தற்பாதுகாப்புக்கலை பயன்படும்.

இன்று முன்பின் அறிமுகமற்ற ஒருவன் வாசலில் நின்றால், அருகேபோய் விபரங்கேட்கவே பயப்படும் காலமாக இருக்கிறது. திருடர்கள் பெருகிவிட்ட காலமிது, இத்தகைய சூழலில் பெண்கள் கராத்தே பயிலவேண்டும் என்று ஊக்குவிப்பதுதான் சிறந்ததென நான் கருதுகிறேன். எல்லோரும் இதைப் புரிந்துகொண்டு கராத்தே பயில்வது நல்லதெனக் கருதவைக்க வேண்டும்.

இதுபற்றி நாம் உரையாடிக்கொண்டிருக்கும்போது அங்கே வந்த சசிகலாவின் மகள் என்ன கூறினாள் தெரியுமா?

"அப்பாவிடம் மில்லியன் கணக்கில் சீதனமிருந்தால் இதைப் பற்றியெல்லாம் எந்தப் பிரச்சினையும் வராது. அதில்லாததால்தான் இவ்வளவு யோசிக்கின்றார்." என்றாள்.

சிந்தி, இது உண்மையா, சசிகலாவின் மகள் கூறியது சரியா?

அன்புடன்,
யோசி.




## பகோடா

*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| கடலைப்பருப்பு | - 1/2 Kg |
| கடலைமா அல்லது அவித்த கோதுமை மா | - 1/4 Kg |
| செத்தல் மிளகாய் | - 20 g |
| வெங்காயம் | - 150 g |
| எண்ணெய் | - 1/2 L |
| பெருஞ்சீரகம், உள்ளி | - அளவாக |
| உப்பு, கறிவேப்பிலை | - அளவாக |

*செய்முறை*



பகோடா செய்வதற்கு கடலைப்பருப்பைத் துப்புரவுசெய்து 1/2 மணித்தியாலம் நனைய விடவும். நனைந்தபின் பருப்பையும், செத்தல் மிளகாயையும், உள்ளியையும் சேர்த்து அரைத்துச் சேர்க்கவும். அதனுள் வெங்காயம், கறிவேப்பிலை ஆகிய வற்றைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிச் சேர்க்கவும். பின் பெருஞ்சீரகம், உப்பு ஆகியவற்றை அளவாகச் சேர்த்து, பிசையவும். பிசையும்போது கடலை மாவையும் சேர்க்கலாம். பின் எண்ணெயைக் கொதிக்க வைத்து நன்றாகக் கொதித்ததும் கையினாலோ, உரலினாலோ பிளிந்து பொன்னிறமானதும் எடுத்து தேனீருடன் பரிமாறலாம்.

## சிகையலங்காரம்

## V STYLE



➩ தலையை நன்கு வாரிக் கொண்ட பின் Poney tail ஆகக் கட்டிக்கொண்ட பின்பு, தலைமுடியை இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொள்க.

➩ முதலாவது பிரிவுத் தலைமுடியை இரண்டு சம பகுதிகளாகப் பிரித்து Pad ஐ வைத்துச் சுற்றி 'V' வடிவில் அமைத்துக் கொள்க.

➩ பின்பு கீழே விடப்பட்டுள்ள இரண்டாவது பிரிவுத் தலைமுடியை சிறு பிரிவுகளாகப் பிரித்து 'V' வடிவில் கீழ்ப்புறமாக வரும் வண்ணம் படத்தில் காட்டியவாறு Curl ஆக அமைத்துக் கொள்க.

➩ இவ் Style ஆனது பதிவுத் திருமணத்திற்கு, மணப்பெண்ணுக்குப் போடப்படும் சிகையலங்காரமாகும்.



# கவிதைச் சோலை



## உயிர்த்தெழுந்து விட்டேன்...

உனக்காக வாழ்ந்த காலங்கள் அன்று.
நீ என்னிடம் அந்தஸ்தை எதிர்பார்த்தாய் இன்று.
அது கிடைக்காமல் போகவே
தொடர் நாட்களில் என்னை வெறுத்தாய்

✻ ✻

முதலில் உன் பிரிவு எனக்கு
வேதனையாகத் தான் இருந்தது
ஆனால் இப்போது வேதனைப்படவில்லை.

✻ ✻

வாழ்வின் சோகச் சிறையில் இனி
நான் இல்லை
கன்னத்தில் முளைத்துச் செழித்த
தாடியை களையெடுத்தாயிற்று.

✻ ✻

என் கவிதைகளின் கருவாயிருந்தவளே!
கடிதங்களில் ஓவியமாய் இருந்தவளே!
உன்னை எண்ணி அழுதது
இனிப் போதுமாகி விட்டது.

✻ ✻

கனவுகளின் கூச்சலால்
மலட்டு தூக்கத்துடன் மல்லுக் கட்டிய
என் விழிகள் இனி வரும் இரவுகளில்
நிம்மதியாய் தூங்கும்.

✻ ✻

இத்தனை நாளாய்
உன் இதயத்தில் இறந்து கிடந்தவன்
உயிர்த்தெழுந்து விட்டேன்
உன்னை மறந்து...

✻✻✻

S.சிறி,
கொக்குவில்.

## காதல்

உன்னத உணர்வின் இணைப்பாய்
உயிர்களின் பரிவுத் துடிப்பாய்
இன்னிசைப் பாடல் மெட்டாய்
இதமாய்த் துடிப்பது காதல்!

நம்பிக்கை வேரின் பிடிப்பில்
நல்லதோர் உறவாய் ஆகி
தும்பிக்கை போன்ற பலமாய்
துணையாய் இருப்பது காதல்!

மனங்களின் தெய்வீகப் பற்றில்
மாசுகள் அறவே அழித்து
இன மத இட வேறுபாடின்றி
இதமாய் இணைவது காதல்!

சின்னச் சின்னப் பரிசில்
சிறப்புகள் நிறைவாய்ப் பெற்று
அன்பின் ஊற்றில் நனைந்து
ஆயுளை வளர்க்கும் காதல்!

வாழ்வின் பாதையை செதுக்கி
வண்ண நாட்களை பிறப்பிக்கும்
வசந்த உறவே காதல்
வாழ்த்துவோம் காதலர் தினத்தை!

சூரியநிலா,
ஈச்சமோட்டை.

## பெப்ரவரி பதினான்கில்...




உயிர் அணுக்களின்
அசைவுகள் - ஒவ்வொன்றும்
உணர்வுகளாய் துடிக்கின்ற
நாள்.
சேர்ந்து கொண்ட இதயங்களின்
தேசிய கீதம் - இந்
நாள்.
காதல் மொழிகள்
உச்சந்தலையேறி
காதல் உயில் எழுதும்
நாள்.
உயிர் நாளங்களின்
நாடித்துடிப்பெல்லாம்
காதலின் இனிமைதனை
இரட்டிப்பாகக் கூறும்
நாள்.
தேசிய கீதமும்
தேசிய உணர்வும்
தேற்றும் மொழிகளும்
தோற்றுப் போகும்
இந்நாளில்
இவையெல்லாம் காதலில்
கரைகண்டவர்க்கு.
மற்றவர்க்கு இவையெல்லாம்
தேடலின் கனவுகள்
வேதனையின் சுவடுகள்
கண்ணீரான காதல்
கனவுகள்
உதிர்ந்த காதல்
சின்னமான கல்லறைக்கு
கண்ணீர்ப் பூத்தூவும்
சில நெஞ்சங்கள்.
ஒருதலைக் காதலில்
உறங்கும்
சில நெஞ்சங்கள்.
காதல் ரணமான
நாளாக கடந்துபோகும்
காதலில் தோற்றவர்க்கு.
காதலில் சிறகு விரித்தவர்களுக்கு
பூத்தூவும் இந்நாள்.

*சி. நளாயினி*
*நீர்வையூராள்.*





## வாழ்வின் ஒரு பக்கம்

நான்
வாழ்க்கையின் ஆரம்பத்துக்கு
முடிவுரை எழுத இஷ்டப்படவில்லை
வெற்றிவானம் தொட்டு
மகிழ்வாய் ஒரு வரி எழுதவே
ஆசைப்பட்டேன்.
தென்றலை ரசிப்பவள் நான்
புயலைத் தொட்டதில்லை
என் பேனா முனையிடம்
கேட்டுப்பார்
என் கதை சொல்லும்.
ஓராயிரம் உறவுக்குள்
நட்புடன் நீந்துபவள்தான் -
ஆனாலும்
உன் உறவினை மட்டும்
ஏன் உச்சமாய் நினைத்தேன்.
விடையே தெரியாத
சிறுபறவை நான்.
வாழ்க்கையின் ஆரம்பப்படிகளில்
கால்வைக்க கற்றுத் தந்தவனே
மீதிப்படிகளை தாண்ட ஏன்
கைகொடுக்க மறந்துவிட்டாய்?

- தமயந்தி

## (அ)சோகவனம்

என் அறிவுக்குத் தெரியும் ~ நீ
எனக்கு எட்டாத வானமென்று...
ஆனால் நீ வாழும் என் இதயத்திற்கு தெரியாது
வெறும் கனவு உன் காதலென்று!
உன் பாதங்களிற்கு மலராய் இருந்தேன் ~ அன்று
அதனால்தான் சருகாகியும் வாழ்கின்றேன் இன்னும்...
ஈரமாய் கசியும் உன் நினைவுகளின் வேதனைக்கு
காதலியாக, அந்த சீதையும் என் காதலும் ஒன்று.
அதனால்தான் என் இதயம் பூஜிக்கின்றதோ
உன்னை இன்னும் புனிதமாய்...
இராமனின் பிரிவில்.... சீதை அன்று அசோகவனத்திலே
உன் பிரிவில்.... இவள் அதே (அ) சோகவனத்தில் ~ இன்று
உன்னைப் பிரிந்த சீதையாய்.

~ ஆர்த்தி.

# பிள்ளைகளைப் புரிந்துகொள்ள முயலுங்களேன்...!

இந்த வயதிலுள்ள பிள்ளைகளைத் தீர்ப்பிட்டுத் தண்டிப்பதைவிட அவர்களைப் புரிந்துகொள்வது முக்கியமானதாகும். சிறு வயதில் பிள்ளைகளில் கீழ்ப்படிதலை எதிர்பார்த்தனர். பிள்ளையும் கீழ்ப்படிந்தது. இதற்குப் பழக்கப்பட்ட பெற்றோர் கீழ்ப்படியாதவாறு செயற்படும்போது பிள்ளையிலே வெறுப்பேற்படுகின்றது. தமது ஆதிபத்தியம், வல்லமைக்கு எதிராகச் செயற்படுவது போன்று தெரிகின்றது. இதேபோன்று இந்த வயதில் பிள்ளைகளின் மனதில் சுயாதீனம் ஏற்படப் பெரியதொரு ஆசை தோன்றுகின்றது. சுதந்திரத்துடன் செயற்பட ஆசை ஏற்படும்.

ஒருநாள் தனது மகளைப் பற்றி ஒரு தந்தை என்னிடம் அனுபவம் ஒன்றைக் கூறினார். "வீட்டில் நான் இருக்கும்பொழுது எனது மகளும் அருகில் அமர்ந்திருந்தாள். அப்போது ஒரு பூனைக்குட்டி துள்ளிக் குதித்து அங்கும் இங்கும் விளையாடிக் கொண்டிருந்தது. இதைக் காட்டியவாறு பூனைக்குட்டிக்கு இருக்கின்ற சுதந்திரம் கூட எனக்கு இல்லையே" என்றாள். அதை நான் சிந்தித்தேன். முன்பு இப்படிக் கூறவில்லையே. இவ்வாறு கூறுவது முன்பைவிட இப்போ எனக்குச் சுதந்திரம் கூடுதலாகத் தேவை என்பதை உணர்ந்தேன் என்று என்னிடம் கூறினார்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் சண்டை போடுவர். சுதந்திரம் தந்தால் கெட்டுப் போய் விடுவீர்கள் என்று அதிகமதிகமாகக் கட்டுப்படுத்துவர். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பிள்ளை பெரியபிள்ளை என்று எண்ணினாலும் பெரிய பிள்ளைகளுக்குக் கொடுக்கக்கூடிய பொறுப்புகளைச் சிறிது சிறிதாகக் கொடுப்பதில்லை. வார்த்தையிலும் சரியா, சரியா என்று கதையின் இடையில் அடிக்கடி கேட்பார்கள். இந்த வயதில் உள்ள பிள்ளைகளுக்குச் சுதந்திரம், பொறுப்பைக் கொடுக்க வேண்டும்.



சுதந்திரத்தைக் கேட்டாலும் சுதந்திரத்தைப் பாவிக்கப் பயமுண்டு. கஷ்டப்பட்டு விடுவேனோ என்ற பயம் பிள்ளையின் மனதிலிருக்கும். சுதந்திரத்திற்கு ஆசையும் அதைப் பாவிக்கப் பயமும் ஒரே நேரத்தில் இருக்கக் கூடும். நான் செய்வது சரியா என்று உறுதியாக இருப்பதில்லை.

இதனால் தமக்கு ஏற்படும் சந்தேகத்தை, பயத்தைப் போக்கப் பெற்றோருடன் சமவயதிலுள்ள நண்பர்களுடன் சேர ஆசைப்படுவர். பெற்றோருடன் மிகவும் நெருக்கமான நட்புறவு பிள்ளைகளுக்கு இருந்தால் பெற்றோருடன் தமது உறவை வளர்ப்பர். இல்லையேல் சம வயதுடன் தமக்கு உதவிபெற அதிகம் சேருவர்.

வயது வந்தவருடன் நெருங்கிப் பழகுவதை விடச் சம வயதிலுள்ளவர்களுடன் நெருங்கிப் பழக உளரீதியில் விரும்புவது இயற்கையே. தமக்கு அதிகம் அர்த்தத்தை, பிரயோசனத்தைத்தரும் எனறு எண்ணுவர். இப்படிச் செய்யப்போகும் தமது குழுவில் சேர வேண்டியேற்படும். சமவயதுக் குழுவில் அங்கத்தவராக வேண்டியேற்படும். சேர்ந்ததும் பல விடயங்களில் கட்டுப்பட்டு விடுவர். குழுவினரின் சட்டதிட்டங்களுக்கு எதிராகச் செயற்படும்போது குழுவிலிருந்து வெளியேற்றப் பார்ப்பர். அதாவது தனது சுயாதீனத்தை ஓரளவு பரித்தியாகம் செய்தே தமது குழுவில் செயற்பட நேரிடும். தமக்கிடையே நடமாடும் விதம் இப்படித்தான் எனக்குழுவில் இருக்கும். அவர்களைப்போல் நடமாடச் சம்மதிக்க வேண்டிவரும். ஆகவே பெற்றோராகிய நாம் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளை இப்படி நடமாடுவது குழுவினரின் நடமாட்டம் இப்படி இருப்பதனாலேயே. உதாரணம்: நாகரீகம், சம வயதுக் குழுவில் தலைமயிர் ஒரே விதத்தில் வெட்டினால் எமது பிள்ளையும் அப்படியே வெட்ட நினைக்கும். எனது மகன் அதற்குப் புறம்பாக இருப்பது கடினமானது.

ஒரு தந்தை என்னிடம் தனது அனுபவத்தைக் கூறினார். "எனக்கு இரு ஆண்பிள்ளைகள் இருக்கின்றனர். நான் தலை மயிரைக் கட்டையாக வெட்டுவேன். பிள்ளைகள் தலை மயிரை வளர்த்துப் பைத்தியமாக நடக்கிறார்கள் என்றார். கண்களும் தெரியாத விதத்தில் தலைமயிர் வளர்த்துள்ளனர். ஒரு நாள் பிள்ளையைக் கூப்பிட்டு மனதில் கற்பனைக் கதை ஒன்றை உருவாக்கிக் கூறினார். உன்னைப் போல் ஒரு மகன் அப்பாவுக்கிருந்தார். கண்களை மூடியவாறு தலைமயிர் இருந்ததால் இரு கண்களைச் சுற்றியும் கத்தரிக்கோலால் வட்டமாக மயிரை வெட்டி விட்டார். கண் தெரிவதற்காக அப்படி வெட்டினார் என்று கூறினார். கண்களை மூடியிருந்த மயிரை வட்டமாகக் கண்கள் தெரியும் விதத்தில் வெட்டினால் மயிர் கீழே விழுந்துவிடுமே. பிசினால் ஒட்டினார்களா, வட்டமாக மயிர் முகத்தை மூடியிருக்க" எனறு கேட்டான் மகன். அதிலும் மனம் புண்பட்டுவிட்டது அப்பாவுக்கு.

இங்கே நீளமாகத் தலைமுடியை வளர்த்தது ஏன், சமவயதுக்குழுவில் சேர்ந்திருக்கவே. இல்லையேல் குழுவினர் பிள்ளையை ஒதுக்கிவிடுவர். சில நேரத்தில் பிழையான செயல்கூட குழுவில் மற்றவர்கள் செய்யும்போது விருப்பமில்லாமல் இருந்தாலும் செய்யாமல் குழுவில் இருக்கமுடியாத நிலைக்கு உள்ளாகுவர். குழுவில் இருக்க வேண்டுமானால் அதைச் செய்ய முனைவர்.

இப்படிப்பட்ட செயல்களால் பிள்ளைகள் பெற்றோருடன் மோதலை ஏற்படுத்துவர். இளமைப்பருவத்திலுள்ள பிள்ளைகள் வீட்டிலிருந்தால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் ஒரு நாளும் மோதலில்லை என்றால் இதுவும் இயற்கைக்குப் புறம்பானதே. மனரீதியில் பிள்ளைகள் அல்லது பெற்றோர் நோயாளிகள் என்பது அர்த்தம். இயற்கையாகச் சிறுசிறு மோதல் வரும்.

எஸ்.ஜே.யோகராசா
உளவளத்துணை ஆலோசகர்

(அடுத்த வாரம் தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகருகி ஒல்லைக் கெடும்

- திருக்குறள்.

# நமது நோக்கு

## சிதைக்கப்படும் உரிமைகள்!

கருத்துக்களைச் சேகரிக்கும் சுதந்திரமும், கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமும் அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒரு நாட்டில் - மக்களுக்குச் செய்திகளைக் கொண்டு செல்லும் வேலையைச் செய்துவரும் ஊடகவியலாளர்கள் மீதான நேரடித் தாக்குதலும் அச்சுறுத்தலும் அண்மைய நாட்களில் தீவிரமாக அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் - படையினரால் உடல்ரீதியாகத் தாக்கப்படுவதும், அவர்களது உடைமைகள் நாசமாக்கப்பட்டு - அச்சுறுத்தப்படுவதுமாக ஊடகவியலாளருக்கான உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன.

யுத்த காலத்தில் - தமிழ் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலையும், கொலை முயற்சிகளும், மிரட்டல்களும் ஊடகவியலாளர்களுக்கெதிரான நேரடியான சவாலாகவும், உண்மைக்கும், நியாயத்திற்குமான கண்ணுக்கு முன்னரேயான ஆபத்தாகவும் உருவெடுத்திருந்த காலம் கடந்துபோக -

சமாதான காலத்திலும் - ஊடகவியலாளர்கள் மீதான அடாவடித்தனம் கட்டவிழ்த்துவிடப்பட்டு வருவது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்.

கருத்துக்களை வெளியிடும் சுதந்திரமும் - அதனை விட மனித உரிமைகளும் பற்றிப் பெரிதாகப் பேசப்படும் நிலையில், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்களில் கூட மனித உரிமைகள் விவகாரம் முக்கிய பங்கெடுத்து வருகின்ற சூழலில் -

தமது பணியைச் செய்ய முயற்சிக்கும் ஊடகவியலாளர்கள் படையினரால் மிருகத்தனமாகத் தாக்கப்படுவதென்பது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது.

அண்மையில் நெல்லியடியில் ஊடகவியலாளர் தவச்செல்வம் மீது பொலிஸார் நடாத்திய தாக்குதல் பற்றிய, மனித உரிமை மீறல் வழக்கு உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றபோதே,

மானிப்பாயில் நேற்றுமுன்தினம் பெண் போராளிகள் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவத்தில், செய்தி சேகரிக்கச்சென்ற இரண்டு ஊடகவியலாளர்கள் படையினரால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களது புகைப்படக் கருவிகள் நிலத்தில் அடித்து உடைக்கப்பட்டன. குறிப்புப் புத்தகங்கள் கிழித்தெறியப்பட்டன.

சம்பவத்தில் படையினரின் தாக்குதலில் நமது ஈழநாட்டின் வலி.கிழக்கு பிரதேசச் செய்தியாளரும், தினக்குரலின் அலுவலக நிருபரும் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முன்பாக வைத்தே அடித்துத் துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தாம் ஊடகவியலாளர்கள் என அவர்கள் தம்மை இனங்காட்டியபோதும், அவர்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்படவில்லை. மாறாக -, அதன்பின்னர் அவர்களது புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டு, அவற்றை நிலத்தில் உடைத்துச் சிதைத்திருக்கின்றனர் படையினர்.

ஊடகவியலாளர்களுக்கு நேர்ந்திருக்கும் இக்கதி - தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான 'அரச பயங்கரவாதம்' இன்னமும் தணிந்து விடவில்லை என்பதையே எடுத்துக்காட்டியிருக்கிறது.

யாழ்.மண்ணில் நிலைகொண்டிருக்கும் படையினரின் இராணுவ ஆக்கிரமிப்பு மனோபாவமும், தாம் எந்த ஒடுக்கு முறைகளையும் மேற்கொள்ளலாம் என்ற திமிர்த்தனமும் சற்றும் குறைந்துவிடவில்லை என்பதை - ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் உறுதிசெய்திருக்கின்றன.

இவ்வாறான நிலையில் - ஊடகவியலாளர்களது பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியிருக்கும் சம்பவங்கள் அடுத்தடுத்துத் தொடர்வதை - ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு எதிர்க்க முன்வர வேண்டும்.

தகவல் தொடர்புத்துறை அமைச்சு எனத் தனியான அமைச்சிருந்தும், யாழ்.அரச செயலகத்தில் தகவற்பிரிவு இயங்கியும், மனித உரிமை ஆணைக்குழுவும், மனித உரிமை ஆர்வலர்கள் பலர் இருந்தும் - ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது தொடர்கதையாவதை இனியும் அனுமதிக்க முடியாது/அனுமதிக்கக் கூடாது.

வெகுசன ஊடகங்களின் தேவை அத்தியாவசியமானதொன்றாக வேண்டிநிற்கும் இன்றைய காலகட்டத்தில் - உண்மை நிலையை வெளிக்கொண்டு வரவும், நியாயத்திற்காகப் போராடவும், ஒடுக்கு முறைகளை - அடாவடித்தனங்களை வெளிக்கொண்டு வரவும் துணிந்து நின்று செயலாற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைவரும் ஒன்றுதிரண்டு குரல்கொடுக்க வேண்டும்.

ஊடகத்துறையின் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட்டாலேயே - அச்சமூகத்தின் உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்டதாகும் என்பதை மனதிற்கொள்வோம்.

# போகிற போக்கில்......

பெப்ரவரி 14 எப்போது வருமென்று தவங்கிடந்தோர் பலர். ஏன் தவங்கிடந்தார்கள் என்று நீங்கள் கேட்கலாம். உங்களுக்குத தெரியாவிட்டால் தனியார் வானொலி ஒலிபரப்புக்களைக் கேளுங்கள். இல்லாவிடில், தனியார் தொலைக்காட்சியைப் பாருங்கள். கடந்த ஒரு மாதமாக இந்த நாளை நினைவு படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கும் காதல், காதல், காதல்......

கொழும்பு நகரின் வீதிகளில் காதலர் தினத்தை முன்னிட்டு அன்பளிப்புப் பொருட்களின் விற்பனை, கடந்த வாரம் மிக அதிகமாகச் சூடு பிடித்திருந்தது. சிறுவர் முதல் பெரியவர் வரை வயது வேறுபாடின்றி காதலர் தின அன்பளிப்பை வாங்கிக் கொண்டிருந்தார்கள்.


கொழும்பில் நடைபாதை வியாபாரிகளைச் சுற்றி நிற்பவர்களில் எந்த வயதினர் கூடுதலாக நிற்கின்றார்கள், வாங்குகிறார்கள் என்று ஓர் ஆய்வு நடத்த வேண்டும் என்ற ஆவலை 50 வயது மதிக்கத்தக்க அந்த மனிதர் ஏற்படுத்திவிட்டார். சரி குட்டி ஆய்வொன்றை மேற்கொள்வோம் என்று கொழும்பு நகரைச் சுற்றிவந்தேன்.

## கொழும்பிலிருந்து உதரன்

பாடசாலை மாணவர்கள் பலர் காதல் அன்பளிப்புக்கள் பலவற்றை வாங்கிக் கொண்டிருப்பதைக் காணமுடிந்தது. அவர்கள் பாடசாலை மாணவர்கள்தான் என்று எப்படித் தெரியும் என்று நீங்கள் கேட்கலாம். அவர்களது சீருடைதான் அவர்களைக் காட்டிக் கொடுக்கிறதே. இதில் ஆண், பெண் வேறுபாட்டைக் காணமுடியவில்லை. இந்த மாணவர்களுள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொழும்பில் படிப்பவர்களையும் காணமுடிந்தது. எமது தமிழ் சமுதாயம் எங்கே செல்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

எமது இளைஞர்கள் இவ்வாறு சுதந்திரப் பறவைகளாகச் சுற்றிக் கலாசாரச் சீரழிவுகளில் ஈடுபடுவதற்கு என்ன காரணம் என வெள்ளவத்தையில் வசிக்கும் புத்திஜீவி ஒருவரிடம் கேட்டேன். அதற்கு அவர், 'வெளிநாடுகளிலிருந்து வரும் பணமும் ஒரு காரணம் என்றார்'. அவர் சொல்வதிலும் உண்மையில்லாமலில்லை.

எமது சமுதாயம் மேலைத்தேய கலாசாரத்தின்பால் அடிமையாகிக் கொண்டிருக்கின்றது. கடந்த வருடம் மேலை நாடொன்றில் காதலர் தினத்தன்று சிலர் நிர்வாணமாக நின்று சாதனை படைத்ததாக எமது தமிழ்த் தினசரி ஒன்று முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தது.



இந்த வருட காதலர் தினத்தை முன்னிட்டு தாய்லாந்து இளைஞர் 11 மணித்தியாலம் மனைவியைச் சுமந்து சாதனை என்ற செய்தியை

## காதலர் தினம் தேவைதானா....?

தலைநகரத் தமிழ்த் தினசரிகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டதோடு, காதலர் தின சிறப்புப் பக்கங்களையும் வெளியிட்டுள்ளன.

காதலர் தினத்தை ஒட்டி நீண்ட நேர முத்தமிடும் போட்டிகளும் மேற்குலக நாடுகளில் நடைபெறுகின்றன. இப்படியான கலாசார சீரழிவு நிகழ்ச்சிகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கத்தான் வேண்டுமா?

தமிழர் வாழ்விலும் காதல் உண்டு. அது நாகரிகமான காதல். அதனால்தான் எமது கலாசாரம் இன்னமும் அழியாமல் பேணப்பட்டுவருகின்றது. எமது கலாசாரத்தில் கிழமைக்கு ஒரு விவாகரத்து இல்லை. மேலைநாடுகளில் விவாகரத்துக்கள் அதிகமாகிவிட்ட காரணத்தினாலேயே தாய்மார் தினம் (Mothers Day) கொண்டாடப்படுகின்றது. நாமும் அதைப் பின்பற்றி தாய்மார் தினம் கொண்டாடிவருகின்றோம். எமது சமுதாயத்தில் தாயை நாம் தினமும் தெய்வமாகவே மதித்து வருகின்றோம். எமக்கு தாய்மார் தினம் அவசியமில்லை. அந்த ஒரு நாளில் மட்டும் தாயை நினைப்பவர்கள் நாம் அல்லரே. எனவே - காதலர் தினமும் தேவையற்ற ஒன்று என்று என சற்றே சிந்திக்கலாமே...!

# வெளிநாட்டு உதவிகள் சகல பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படவேண்டியது அவசியம்

## யசுஷி அகாஷியிடம் மல்வத்த பீடாதிபதி

(கொழும்பு)

இலங்கைக்கென வழங்கப்படும் உதவிகள் நாட்டின் ஒரு பகுதிக்கு மட்டுமன்றி அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியிடம் மல்வத்த மகாநாயக்கர் வண.ரம்புக்வெல விபஸி தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு யசுஷி அகாஷி நேற்று முன்தினம் விஜயம் செய்தபோதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார். அங்கு மல்வத்த மகாநாயக்கர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் ஒரு பகுதிக்கு மட்டும் விசேட கவனம் செலுத்துவது நல்லதல்ல. அனைவரினதும் விருப்பமும் தேவையும் அமைதியேயாகும். சமாதானம் ஒரு பக்க முயற்சியாக இருக்கக் கூடாது. இரு தரப்பும் அதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

- என மல்வத்த மகாநாயக்கர் மேலும் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த யசுஷி அகாஷி, இந்தக் கருத்தைத் தான் ஜப்பானிய அரசுக்கு எடுத்துக் கூறுவதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, அஸ்கிரிய பீடாதிபதி வண உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரர், தமிழ்த் தீவிரவாதிகளால் நாடும், சிங்கள மக்களும் ஒரு காலத்தில் பாதிக்கப்பட்டனர், வேதனைப்பட்டனர். நாட்டின் பொருளாதாரமும் மோசமடைந்திருந்தது. இன்று அந்நிலை மாறியிருப்பதாகத் தெரிவித்தார்.

யசுஷி அகாஷியுடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, ஐ.தே.க. தலைவர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் கண்டி தலதா மாளிகைக்குச் சென்றிருந்தனர்.

# எரிபொருள்களின் விலை நள்ளிரவு முதல் அதிகரிப்பு!

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு தொடக்கம் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

ஒரு லீற்றர் டீசல் விலை 1 ரூபா 50 சதத்தாலும் பெற்றோலின் விலை 2 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தவிலை மாற்றங்கள் 30 நாட்களுக்கு அமுலில் இருக்கும் என பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# அங்கீகாரமற்ற கட்டடங்கள் பிரதேசசபை நடவடிக்கை

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் முன் அனுமதி பெறப்படாமல் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களாலும், பொது மக்களாலும் கட்டடங்களை அமைக்கின்ற நடவடிக்கைகளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர்ப் பிரதேசசபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பிரதேசசபையின் உரிய அங்கீகாரம் பெறப்படாமல் கட்டடங்கள் அமைக்கப்படுவதால் போக்குவரத்து, சுகாதாரம், சூழல் போன்றவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும், இதனால் பிரதேசசபை கட்டளைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

# நிர்வாக சேவை நேர்முகப்பரீட்சை; உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடை!

(கொழும்பு)

வட - கிழக்கு மாகாணத்திலுள்ள அரசாங்க நிர்வாகசேவை வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொது நிர்வாக அமைச்சு போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்த 117 பேருக்கும் நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

வட - கிழக்குப் பகுதியிலுள்ள நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்படவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களின் அடிப்படையிலேயே இந்த இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

இம்மனுக்களை 52 பேர் சமர்ப்பிததுள்ளனர். கடந்த 2002 ஆம் ஆண்டு மே 17 ஆம், 19 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட அரசாங்க நிர்வாக சேவைக்கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சையில் தோற்றி - இதுவரை நியமனம் பெறாதுள்ள 164 பேர் சார்பிலேயே இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

164 பேருக்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தும், திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்காததால் இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை. இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதிபதிகள், இத்தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளனர். இந்த வழக்குத் தொடர்பான அடுத்த கட்ட விசாரணைகள் ஏப்ரல் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

# ஆதரித்து அரவணைத்த மந்திகை மருத்துவமனை அநாதரவாக வசதிகளின்றியிருக்கும் அவலநிலை

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றுடன் சுகாதாரமும் முக்கிய தேவையாக பின்னிப்பிணைந்து நிற்கின்றது. மனிதனின் அறிவு வளர்ச்சிப் பாதையில் இன்று அவனது ஆரோக்கியம் கெட்டு நிற்கின்றது. அந்தவகையில் அவனுக்கு மருந்துத் தேவைகள் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

யாழ். குடாநாடு கடந்த காலங்களில் போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டு இருந்ததுடன், மருத்துவச் சேவைகளும் மிகப் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்தது. இன்றும்கூட இந்தநிலை சீரடைந்துவிடவில்லை. மருத்துவச் சேவைகளைப் பொறுத்தவரையில் குடாநாட்டு மக்களின் வாழ்வாதாரங்களாக இருப்பவை அரச வைத்திய சாலைகளே யாகும். குடாநாட்டு வைத்தியசாலைகள் இன்று பல குறைபாடுகளுடனேயே காணப்படுகின்றன. இந்த வகையில் வடமராட்சி மக்களின் பிணி போக்கும் பிரதான வைத்திய சாலையாக விளங்குவது மந்திகை ஆதார வைத்தியசாலையாகும்.

மந்திகை மருத்துவமனை இன்று நேற்றல்ல பலகாலமாகவே வடமராட்சியின் மருத்துவச்சேவைகளில் தூணாக விளங்கி வருகின்றது. எத்தனையோ இடர் சூழ்ந்த காலங்களில் இந்த மருத்துவமனை மக்களுக்கு ஆற்றிய சேவையை மறந்துவிடமுடியாது.

அது மட்டுமல்ல 1995 ஆம் ஆண்டு வலிகாமம் இடப்பெயர்வு, 2000 ஆம் ஆண்டு தென்மராட்சி இடப்பெயர்வு ஆகியவற்றில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் சாவகச்சேரி வைத்திய சாலைக்கும் புகலிடம் அழித்து உதவியது இந்த மருத்துவமனைதான். ஆனால், இன்று இந்த ஆதார வைத்தியசாலை ஆதரிக்க யாருமின்றி அவதியுற்றுத் தவிக்கின்றது. இந்த வைத்தியசாலை அனுபவிக்கும் துயரங்களோ பல. பலரும் இந்த வைத்தியசாலை தொடர்பில் பல குறைபாடுகளை அடுக்கிக் கொண்டு செல்கின்றனர். இந்த வைத்தியசாலை தொடர்பில் தெரிவிக்கப்படும் குறைபாடுகள்தான் என்ன?

**வைத்தியர்களின் பற்றாக்குறை**

இன்று மந்திகை மருத்துவமனை ஆக 5 வைத்தியர்களின் சேவையுடன் மட்டும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த 5 வைத்தியர்களிலும் 3 பேர் பதிவு செய்த மருத்துவர்கள் (ஆர்.எம்.பி). இரண்டு பேர் எம்.பி.பி.எஸ். மருத்துவர்கள். ஒருவர் மாவட்ட வைத்திய அதிகாரி. மற்றைய மருத்துவரோ குழந்தையியல் மருத்துவர். ஏனைய 3 ஆர்.எம்.பி. மருத்துவர்களே மிகுதிப் பணிகளைக் கவனிக்க வேண்டியுள்ளது.

தற்பொழுது வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சைபெறவரும் நோயாளர்களின் தொகையும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஒரு வைத்தியர் தனியே வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றும்போது, நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் அது நோயாளர்களுக்கே பாதகமாக அமைகின்றது. ஏனெனில், அளவுக்கதிகமான நோயாளர்களை ஒரு வைத்தியரே கவ்னிக்கும்பொழுது ஒவ்வொரு நோயாளியையும் நன்கு கவனிக்க முடிவதில்லை. அது மனித இயல்பு. இதனைவிட விடுதிகளில் (வாட்டுக்கள்) அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களையும் வைத்தியர்கள் தினசரி பார்வையிட வேண்டியுள்ளது. தற்பொழுது விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால், வைத்தியர்களின் வேலைப்பளு மேலும் அதிகரிப்பதாக வைத்தியர்கள் குறிப்பிடுகின்றார்கள். இங்கு பணிபுரியும் பிரான்ஸ் நாட்டு மருத்துவக்குழுவின் (M.S.F.) சேவையும் வரையறுக் கப்பட்டதாகவேயுள்ளது. அதாவது சத்திரசிகிச்சையுடன் தொடர்புடைய அல்லது காயமடைந்தவர்களுக்கான சிகிச்சையளிப்பதுடன் அவர்கள் தங்கள் பணியை நிறுத்திக் கொள்கின்றார்கள். மற்றைய நோயாளர்களில் அவர்கள் தலைபோடுவதில்லை.

**தாதியர்களின் பற்றாக்குறை**

மந்திகை மருத்துவமனையில் வைத்தியர்களின் பற்றாக்குறை போன்றே தாதியர்களுக்கும் கடும் பற்றாக்குறை நிலவுகின்றது. ஐம்பது பேருக்கு மேல் வெற்றிடங்கள் உள்ளபோதும், கடந்த சில தினங்களுக்கு முன் ஆறு தாதியர்களே புதிதாக இங்கு பணிக்கமர்த்தப் பட்டுள்ளனர்.



பழுதடைந்து திருத்த முடியாது கைவிடப்பட்ட நிலையில் உள்ள எக்ஸ் கதிர் இயந்திரங்கள்.

இதனால் இங்கு கடமைபுரியும் தாதியர்கள், தாம் தொடர்ச்சியாகக் கடமையாற்ற வேண்டியிருப்பதாக வேதனையுடன் சுட்டிக்காட்டுகின்றார்கள். அத்துடன் தேவைக்குக் குறைவான தாதிகள் கடமையில் ஈடுபட்டுக்கொண்டு - மருத்துவசேவை தொடர்பான கணக்குகளையும் தாமே பேணவேண்டி இருப்பதால், நோயாளர்களுக்கு முழுமையாகச் சேவையாற்ற முடியாதநிலை இருப்பதாகவும் இவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள்.

இதேவேளை, இவ்வாறு தாதியர் பற்றாக்குறை நிலவுவதால் அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்படும் நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு அவர்கள் படும்பாடும் பெரும் திண்டாட்டமாகவுள்ளது. இதைவிட இவ்வாறு சேவையாற்றிக் கொண்டிருக்கும் தாதியர் பலர் விரக்திநிலையில் ஏதோ கடமைக்காகத் தங்கள் பணிகளை ஆற்றிக் கொண்டிருப்பதனையும் இங்கு காணமுடிகின்றது. எனவே, மந்திகை மருத்துவமனைக்குத் தாதியர்களின் நியமனம் என்பதுவும் உடனடித் தேவையாகவுள்ளது.

**செயலிழந்த எக்ஸ் கதிர் பிரிவு**

எக்ஸ் கதிர் படங்களை எடுப்பதற்குத் தேவையான படச்சுருள்கள் அற்ற நிலையில் எக்ஸ் கதிர் படங்களை எடுப்பதற்குத் திண்டாடிய நிலைமையிலிருந்தது ஒரு காலம். ஆனால், தற்பொழுது மந்திகை மருத்துவமனையில் நிலைமை தலைகீழாக உள்ளது. எக்ஸ் கதிர் இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான ஆளின்றி பல மாதங்களாக எக்ஸ் கதிர் பிரிவு செயலிழந்து அதன் கதவுகள் இறுகப் பூட்டிய நிலையில் உள்ளது.

எக்ஸ் கதிர் படம் எடுக்கவேண்டிய நோயாளர்கள், யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டு, அங்கு எக்ஸ் கதிர் படம் பிடிக்கப்பட்டு, அந்தப் படங்கள் கிடைத்த பின்பே நோயாளர்களுக்கான சிகிச்சையளிக்கப்படுகின்றது. ஆகமொத்தத்தில் நோயாளர்களுக்கான சிகிச்சையளிக்க ஆரம்பிக்க குறைந்தது மூன்று, நான்கு நாட்களாகின்றன. இன்று விஞ்ஞான யுகம், கணினியுகம், விண்வெளியுகம் என்று உலகம் மின்னல் வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்க - மந்திகை மருத்துவமனை மட்டும் கற்காலத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றது.

ஆய்வுகூடத்திலும் அங்கு கடமைபுரியும் ஆய்வுகூடப் பரிசோதகர்களிடையேயான போட்டி காரணமாக நோயாளர்கள் சிலவேளைகளில் பாதிப்படைகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுகளும் எழத் தொடங்கியுள்ளன. மேலும், ஆய்வுகூடத்திலும் போதியளவு உபகரணங்கள் இல்லை. அத்துடன், யாழ்.குடாநாட்டில் தற்பொழுது பரவத்தொடங்கியுள்ள டெங்குக் காய்ச்சலைக் கண்டறிவதற்கான மருந்து வகைகளும் ஆய்வுகூடத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் ஆய்வுகூடத்தின் ஒழுங்குமுறையான செயற்பாடு என்பது கேள்விக்குறியாக எழுந்து நிற்கின்றது.

மந்திகை மருந்துவமனையிலிருந்து அவசரச் சிகிச்சைக்காக நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்படுவது வழமை. ஆனால், தற்பொழுது இங்குள்ள நிலைமையால் அதிகளவான நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதனால், யாழ்.போதனா வைத்தியசாலை அதிகாரிகள் "இந்த சின்ன வருத்தத்துக் கெல்லாம் இங்கு ஏன் வருகின்றீர்கள்" என்று கூட்டிச்செல்லும் ஊழியர்கள் மீது குறைபட்டுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் கண்களை இறுக மூடிக்கொண்டு இருக்கும் பொழுது, யார் யாரை நொந்து என்ன பயன்? ஒட்டுமொத்தத்தில் மந்திகை மருத்துவமனை அனைவராலும் கைவிடப்பட்டுத் தனியே ஒரு அநாதையைப்போல் வெறும் கட்டடமாகவே இன்று காட்சி தந்து கொண்டிருக்கின்றது. இன்று பெயருக்கு, ஊருக்கு ஒரு மருத்துவமனை என்று மந்திகை மருத்துவமனை இருக்கின்றது.

இன்று இந்த மந்திகை மருத்துவமனையைப் பற்றியும் எந்த அரசியல்வாதிகளும் சிந்திக்கவில்லை என்பதை இங்கு வேதனையுடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இதேவேளை, மருத்துவமனை நலன்புரிச் சங்கமும் இன்றுவரை இந்த வசதியீனங்கள் பற்றிக் கவலை கொண்டதாகவே தெரியவில்லை. எல்லோரும் நாமுண்டு நமது வேலை உண்டு என்று இருந்து கொள்கின்றார்கள்.

மேலும், இந்த மண்ணில் பிறந்த வைத்தியர்கள், இந்த மண்ணில் உருவாகிய வைத்தியர்கள் பிறந்த மண்ணுக்காகச் சில காலங்களாவது பணிபுரிய முன்வருதல்வேண்டும். இன்று வவுனியா, திருமலை வைத்தியசாலைகளில் தேவைக்கதிகமான வைத்தியர்கள் கடமைபுரிவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இவ்வாறு பணிபுரிவது உண்மையாயின் அவர்கள் ஏன் இங்குள்ள மருத்துவமனைகளில் கடமைபுரியக்கூடாது?

தன்னை உருவாக்கிய சமூகத்துக்கு வைத்தியர் என்றுமே கடமைப்பாடுடையவராகின்றார். எனவே இவ்வாறு இந்த மண்ணில் உருவாகிய வைத்தியர்கள் தங்கள் நன்றிக் கடனைச் செலுத்துவார்களா?

அண்மையில் இங்கு சுகாதார அமைச்சர் கூட வந்தார், பார்த்தார், சென்றார் - அவ்வளவுதான். அவர் வந்து சென்று மாதங்கள் பல கடந்தும் மந்திகை மருத்துவமனை இன்றும் அதேநிலையில்தான் இருக்கின்றது.

நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரிக்கும் எமது பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த மருத்துவமனைக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுக்க அரசுக்கு அழுத்தம் கொடுப்பார்களா? மருத்துவமனை நலன்புரிச் சங்கம், புத்திஜீவிகள், சமூகப் பெரியோர்கள், மதத் தலைவர்கள் போன்றோர் இந்த மருத்துவமனைக்கு அடிப்படை வசதிகள்தானும் கிடைப்பதற்கு முயற்சி எடுப்பார்களா? ★



செய்திக்கட்டுரை

\- முரசொலியான்

## 'எனது', 'உனது' என்றில்லாத எண்ணமே சிறந்ததாகும்

ஒரு திரையரங்கிற்குச் செல்கிறோம், நமக்கென்று ஓர் இருக்கை ஒதுக்கப்பட்டுள்ளது. "இது என்னுடையது" என்று கூறி அங்கு நடைபெறும் காட்சி முடியும் வரையில் அதில் அமர்ந்துவிட்டு பின்பு எழுந்து சென்று விடுகிறோமல்லவா! மீண்டும் அதே இருக்கையில் மற்றொருநாள் காட்சி பார்க்கும்போது உட்காருகிறோமா? இல்லை. மற்றோர் இருக்கையில் அமர்கிறோம். நாம் அமர்ந்த இருக்கையை மற்றவர் யாரோ "எனது இருக்கை" என்று உரிமை கொண்டாடுகிறார்.

அவ்வாறே பணிபுரியும் இடத்தில் 'நமது' இருக்கை என்று அங்கு வேலை செய்யும் வரையில் உரிமை கொண்டாடுகிறோம். வேறு இடத்திற்கு மாறிச் செல்லும்போது இருக்கையும் மாறுகிறது.

\- இவ்வாறு நமது வாழ்வில் 'நமது' என்று உரிமை கொண்டாடும் ஒவ்வொரு பொருளும் ஒரு சிறிய காலகட்டத்திற்குத்தான் 'நமதாக' இருக்கிறது என்பதைச் சற்று ஆராய்ந்து அமைதியாகக் கவனித்தால் தெரியும். அதனால் எதுவுமே நிச்சயமானதல்ல என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது.

ஆனால், இப்படியொரு உண்மை வேதங்களில் சதா கூறப்பட்டு வருகிறது. "எனது, உனது" என்பதெல்லாம் சாஸ்வதமில்லாதவை, வெறும் மாயை என்று வலியுறுத்திக் கூறுகின்றன. இந்தப் பேருண்மையை எல்லோரும் உணரவேண்டும் என்று பற்பல நிகழ்ச்சிகளைக் கோடிட்டுக் காட்டி விளக்குகின்றன.

நமது துன்பங்களை நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் அவைகள் அடிப்படையில் நமது செயல்களே காரணம் என்பதை அறிவோம். உதாரணத்திற்கு வீடு ஒன்று வாங்குகிறோம் அல்லது கட்டுகிறோம்.

அதில் குடியிருக்கும்போது நலல தானதர்மங்கள் செய்யவேண்டும். நம்மைத் தேடி வருவோரை நல்ல எண்ணங்களுடன் உபசரித்து ஆனந்தப்படுத்த வேண்டும். அவர்கள் பிரிந்து செல்லும்போது "அடடா! இவர்களைப்போல் நல்ல மனிதர்களை

### ஆன்மீக அரங்கம்

இனியும் பார்க்க முடியுமா?" என்று விருந்தினர் வாழ்த்திச் செல்லவேண்டும்.

பிறர் நலமுடன் வாழவேண்டும். அவர்கள் சந்தோ'மாக இருந் திட நாம் பெரும்முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணங்கள் இருந்தால் நாமும் அந்த ஆனந்தச் சூழ்நிலையில் ஆனந்தமாக வாழ்வோம் என்கிறது வேதம். சுற்றம் சூழலும் அமைதியற்று இருந்தால் நம்மால் சந்தோ'மாக இருக்க முடியுமா...?

மேலும், நமது சுக துக்கங்களுக்கு நாமே பொறுப்பு என்றும், நமது துன்பத்திற்கு மற்றவர்களைக் கோடிட்டுக் காட்டக்கூடாது என்றும் நான்கு மறைகளும் வலியுறுத்துகின்றன. நமக்கு தேவையில்லாதவற்றின் மேல் ஆசை வைக்கக்கூடாது என்றும் தேவையானவைகளின் மீது அதீதமான, சாஸ்வதமான ஆசை வைக்கக்கூடாது என்றும் உபதேசிக்கப்படுகிறது.

ஒரே பொருளின் மேல் அதிகமான ஆசை வைப்பதால் அது கேடு விளைவிக்கும் என்றும், நமது துன்பத்திற்கு நாமே பொறுப்பு என்றும் விளக்குவதற்குப் புராணக் கதை ஒன்றுள்ளது.

இந்தக் கதையிலிருந்து இந்தத் தத்துவத்தை அறிகிறோம். மேலும் ஒரே இடத்தில் நமது உடைமைகள அனைத்தையும் சேர்ப்பது நல்லதல்ல என்பதற்கும் இதுவே எடுத்துக்காட்டாகும்.

நாமும் ஒன்றின் மீது மட்டும் அளப்பரிய ஆசை வைப்பது நல்லதல்ல என்பதையும் உணர்கிறோம்.

இன்பம் - துன்பம் யாவுமே நமது கையில்தான் இருக்கிறது என்று பற்பல தத்துவக் கதைகளும், சம்பவங்களும் எடுத்துரைக்கின்றன.

சுயநலமின்றி நல்ல எண்ணங்களுடன் பிறர் நலன்கருதி கோபதாபங்களை விடுத்து நிதானமாகச் செயற்பட்டால் பரந்து விரிந்துள்ள இந்த உலகம் ஓர் ஆனந்தபுரியாக விளங்குமென்பதில் சந்தேகமும் உண்டோ?

\- கவிமாமணி -





# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## சோதனை மேல் சோதனை


அரவிந்த - எதிர்பார்ப்பு...!


சாதிக்குமா பங்களாதேஷ்...?

இன்று சந்திக்கப் போகின்றவர்கள் இரண்டு உபகண்ட அணிகள். இரண்டும் டெஸ்ட் அணிகள். தலா ஒவ்வொரு ஆட்டம் கண்டு இலங்கை நல்லதொரு வெற்றியும், பங்களாதேஷ் எரிச்சலூட்டும் தோல்வியும் கண்ட நிலை. ஆட்டம் நடக்கப்போவது பீட்டர்மரிட்ஸ் பேக் ஓவல் மைதானத்தில்.

மைதான அமைப்பு மற்றும் சூழல் இங்கிலாந்தின் கன்ரர்பரி மைதானத்தை நினைவூட்டுமாம். அதெல்லாம் இருக்கட்டும். சனத்தின் அணி, அவுஸ்திரேலியாவில் இருந்து புறப்படும்போதே தன்னை மீட்டுக் கொண்டது. அதனை நியூசிலாந்துடனான ஆட்டத்தில் நிரூபித்தும் விட்டது. இந்த ஆட்டத்தின் முடிவில் சந்தேகமேதும் இருக்கப்போவதில்லை.

என்றாலும், பங்களாதேஷ் அணி ஈடுகொடுத்துப் போராட வேண்டும். நல்லதொரு FORM இல் இலங்கை அணி காணப்படுகின்றது. பலமான துடுப்பாட்ட வரிசை கொண்டது இலங்கை. அதேபோல் பங்களாதேஷை திக்குமுக்காட வைக்கும் பந்துவீச்சுப் பலமும் இலங்கைக்கு இருக்கின்றது.

எனவே, இன்று நடைபெறும் ஒரேயொரு போட்டியான இந்தப் போட்டி ஒரு பக்கப் போட்டியாக இல்லாமல் ரசிகர்களுக்கு விருந்தளிக்கும் போட்டியாக இருக்க வேண்டும் என்பது ரசிகர்களின் விருப்பம்.


முரளி காட்டலாம் சாகசம்.


மக்மூத் - மீளுமா பங்களாதேஷ்?

## யாருக்கு யார் வல்லவன்



நல்லதொரு ஆட்டம் இறுதியில் அரசியலால் இழக்கப்பட்டுவிட்டது. சிம்பாப்வே இங்கிலாந்துக்கு இடையிலான ஆட்டமே ரத்துச்செய்யப்பட்டது. கடந்த மாதம் முதலே பல்வேறு சர்ச்சைகள், இறுதியில் இங்கிலாந்து வீரர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் என்று கொண்டுவந்து முடித்து, இங்கிலாந்து தன் அரசியல் விளையாட்டைக் காட்டிவிட்டது.


இப்போது நசார் ஹுசைனும் ஏதோ விளையாடாமை பற்றிக் கவலைப்படுவது போல ஒரு மாயையை ஏற்படுத்த முனைகிறார். ICC இந்த ஆட்டத்தை பின்னர் ஒரு திகதிக்கு மாற்றும். மாற்றாமல்விடவும் கூடும். அதற்கு சிம்பாப்வே உடன்பட வேண்டுமே. ZCU தன் முடிவை மாற்றிக்கொள்ள வேண்டும். இங்கிலாந்து ஆட்டத்தை ரத்துச்செய்தால் நான்கு புள்ளிகளை இழக்கும். பெருந்தொகைப் பணம் அபராதம் கட்டவேண்டி வரும். நிச்சயம் சிம்பாப்வே இங்கிலாந்து சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளாது.

இதேவேளை, ICC இந்த ஆட்டத்தை ரத்துச்செய்தால் இங்கிலாந்து இரண்டு புள்ளி மட்டும் இழக்கும். Super Six இற்குத் தகுதிபெறும் சந்தர்ப்பம் இருக்கும். இங்கிலாந்து தண்டம் கட்ட வேண்டி வராது. இதுதான் நிலை. எதுவானாலும் நல்லதொரு ஆட்டம் இழக்கப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. அதோடு ஆதிக்கம் செலுத்தியவர்கள் தம் ஆதிக்கத்தை எந்த வகையிலாவது தொடர்ந்தும் வைத்திருக்கவே விரும்புகிறார்கள் என்பதும், அதற்கு வாய்ப்பான சாதக நிலைமைகளும்கூடக் காணப்படுகின்றன என்பதும் ஒரு துயரம்.

- குணா.


நியூசிலாந்து - மேற்கிந்திய மோதலிலிருந்து...


லாராவின் இழப்பு - ஆர்ப்பரிக்கிறது நியூசிலாந்து.


பிளெமிங்கை வீழ்த்திய மகிழ்ச்சியில் மேற்கிந்தியத்தீவின் டிலோன்.


ஹூப்பரும் சோடை போனார்.


மார்லன் சாமுவெல்ஸ் தவறவிட்ட பிடியொன்றால் பலம்பெற்றது நியூசிலாந்து.

## வாழ்க்கை என்பது வியாபாரம்...


லெ.்.வபர்

நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா மிக மெதுவாக ஆரம்பித்து திடீரென வாணவேடிக்கை காட்டி ரசிகர்களுக்கு அபாரமான தன் திறமையைக் காட்டப்போகின்றது என்று யாரும் நினைத்திருந்தால் "கிரிக்கெட் ஆட்டம் நிச்சயமாகச் சொல்ல முடியாத ஆட்டம்தானே" என்று இப்போது சமாளிக்க வேண்டியதுதான்.


ஏனெனில், நெதர்லாந்து காட்டிய வித்தை அப்படிப்பட்டது. 'ரவிசாஸ்திரி அலுத்துக்கொண்டதுபோல டெஸ்ட் அந்தஸ்து அணி ஒன்று நெதர்லாந்திடம் தாக்குப்பிடிக்க முடியாமல் 50 ஓவர்களுக்குள் ALL OUT ஆகியது முதலாவது.


வேன் பங்க்

இதற்குக் காரணம் நெதர்லாந்துப் பந்துவீச்சு இந்தியாவை அந்தமாதிரிக் கட்டிப் போட்டது. சர்வதேசத் தரம் வாய்ந்த பல வீரர்களின் களத்தடுப்புக்குச் சற்றும் குறையாமல் அதே தரத்தில் களத்தடுப்பு செய்தது இரண்டாவது காரணம்.

இன்னொன்று நாற்பது வயது நிறைந்த அணித்தலைவர் லெ.்.வபரின் அதீத திறமை. இப்படியாக அடுக்கிக்கொண்டே போனால் இந்தியாவைப்பற்றிச் சொல்ல என்ன மிச்சம் இருக்கப்போகிறது. கடைசியில் MAN OF THE MATCH நெதர்லாந்தின் பந்து வீச்சாளர் டீ லீட்டிற்கு.

நெதர்லாந்து நாடு சர்வதேச ஹொக்கிப் போட்டிகளில் முத்திரை பதித்த நாடு. அதேபோல் உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் பல தடவை கலந்து கொண்ட நாடு. அவர்களின் கிரிக்கெட் திறமையும் அந்தவகையில் ஒப்பிடும்போது ஒன்றும் ஆச்சரியப் படவேண்டியது அல்ல.


கங்கூலி

ஆனால், இந்தியாவின் நிலை என்ன? துடுப்பாட்ட வீரர்களின் வரிசை சடசடவென்று சரிந்துகொண்டே போயிற்று. இந்தியாவைக் காப்பாற்றியது பந்துவீச்சாளர்கள்தான். இதுவே வெற்றிக்குக் காரணம். எதிர்வரும் ஆட்டங்களில் இரண்டு இந்தியாவின் மனநிலையை எப்படி வைத்திருக்கப் போகிறது...?

ஒன்று அவுஸ்ரேலியா. இந்த அணி பாகிஸ்தானுக்கே தண்ணி காட்டிய அணி. அடுத்தது பாகிஸ்தான். இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் என்பது அரசியல் கலந்த விளையாட்டு. இந்தியா என்ன செய்யப்போகின்றது. கங்கூலியும் அவர் தோழர்களும் விளம்பரங்களில் நடிப்பதில் காட்டும் ஆர்வத்தை விளையாட்டின் பக்கம் திருப்பினால் ஒழிய இந்தியாவுக்கு விமோசனமில்லை.


டீ லீட்

இறுதியாக சிறிநாத் 300 விக்கெட் பெற்றதும், சச்சின் உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றதும் மகிழ்ச்சியான செய்தி.

ஆனால், இது இந்திய ரசிகர்களுக்கு சோளப்பொரி. CONGRATS NETHARLAND!

- ஜெயநிரான்.

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ணப் போட்டியொன்றில் வேகமான சதம் பெற்றவர் யார்?

கபில்தேவ், எதிர் சிம்பாப்வே 72 பந்துவீச்சுக்களில் (1983)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### நியூசிலாந்து அணி எதிர் மேற்கிந்தியத்தீவுகள் அணி

**நியூசிலாந்து அணி**

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| பிளெமிங் | 25 | 25 | 4 | 1 |
| வெட்டோரி | 13 | 25 | 2 | 0 |
| அஸ்ரல் | 46 | 70 | 6 | 0 |
| ஸ்டைரிஸ் | 05 | 15 | 1 | 0 |
| கெய்ன்ஸ் | 37 | 44 | 2 | 1 |
| வின்சன்ட் | 09 | 11 | 1 | 0 |
| ஹரிஸ் | 19 | 35 | 1 | 0 |
| மக்கல்லம் (ஆ.இ.) | 36 | 53 | 1 | 0 |
| அடம்ஸ் (ஆ.இ.) | 35 | 24 | 1 | 0 |
| உதிரிகள் | 16 | | | |

மொத்தம் 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு - 241

**மேற்கிந்தியத்தீவுகள் அணி**

| வீரர்கள் | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| கைல் | 22 | 29 | 5 | 0 |
| ஹின்ட்ஸ் | 14 | 31 | 2 | 0 |
| லாறா | 02 | 4 | 0 | 0 |
| சந்தர்போல் | 02 | 7 | 0 | 0 |
| ஹூப்பர் | 03 | 11 | 0 | 0 |
| சர்வான் | 75 | 99 | 7 | 0 |
| பவல் | 14 | 14 | 1 | 1 |
| ஜேக்கப்பஸ் | 50 | 73 | 3 | 1 |
| டிரேக்ஸ் (ஆ.இ.) | 16 | 18 | 1 | 0 |
| மக்லீன் | 05 | 7 | 0 | 0 |
| டிலோன் | 08 | 6 | 0 | 0 |
| உதிரிகள் | 10 | | | |

மொத்தம் 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களும் இழந்து-221.

**பந்து வீச்சு - மேற்கிந்திய அணி**

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| டிலோன் | 10 | 1 | 30 | 1 |
| மக்லீன் | 6 | 0 | 38 | 0 |
| டிரேக்ஸ் | 10 | 1 | 49 | 2 |
| ஹிண்ட்ஸ் | 10 | 0 | 35 | 3 |
| ஹூப்பர் | 9 | 0 | 42 | 0 |
| கைல் | 5 | 0 | 37 | 1 |

நடுவர்கள் : டி.பி. ஹயர், கோற்சென்
மைதானம் : போர்ட் எலிஸபெத்

**பந்து வீச்சு - நியூசிலாந்து அணி**

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| பொண்ட் | 10 | 2 | 43 | 0 |
| அடம்ஸ் | 9.4 | 1 | 44 | 4 |
| ஓரம் | 10 | 2 | 26 | 2 |
| கெய்ன்ஸ் | 1 | 0 | 21 | 0 |
| வெட்டோரி | 10 | 0 | 38 | 1 |
| அஸ்ரல் | 4 | 0 | 14 | 0 |
| ஸ்டைரிஸ் | 5 | 0 | 31 | 1 |

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003 இல் நேற்று ஐந்தாவது நாள் போட்டியில் மேற்கிந்திய அணியை 20 ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது.

*சிறப்பாட்டக்காரர் - அன்ட்ரீ அடம்ஸ் (நியூசிலாந்து)*

*நியூசிலாந்து பெற்ற புள்ளிகள் - 04*

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பத்திரிகையாளர் மீதான தாக்குதல்; கண்டித்து திங்களன்று போராட்டம்

மானிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் யாழ்.பத்திரிகையாளர்கள் மீதும் படையினரால் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தகவல் திணைக்களம் முன்பாக அகிம்சைப் போராட்டம் ஒன்றை நடாத்தவுள்ளதாக யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம், ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கறுப்புத்துணியால் வாயையும் கைகளையும் கட்டி, ஊடகவியலாளர் போராட்டம் நடாத்தவுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மணல் திட்டியில் சிக்கிய 16 பேர் மீனவர்களால் மீட்பு

இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய வேளை மணல் திட்டியில் சிக்கி உயிருக்காக போராடிக்கொண்டிருந்த இலங்கைத் தமிழர்கள் 16 பேர் மீனவர்களால் மீட்கப்பட்டனர்.

இந்தியாவிலிருந்து படகு ஒன்றின் மூலம் வந்த இவர்கள் மன்னார் உடுமலைப் பகுதியிலுள்ள திட்டியில் சிக்கி படகினை நகர்த்த முடியாது உயிருக்காக போராடிக் கொண்டிருந்தவேளை மீனவர்களால் மீட்கப்பட்டனர்.

பெண்கள், சிறுவர்கள் உட்பட 16 பேரை, மீட்ட மீனவர்கள் அவர்களைக் கரைசேர்த்துள்ளனர்.

## புலிகள் குழு திரும்பியது

ஜேர்மனியில் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் நேற்று கிளிநொச்சி திரும்பியுள்ளனர். நேற்றுக்காலை 8.45 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் இவர்கள் வந்தடைந்தனர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா, விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் ஜேர்மன் சென்றிருந்த போராளிகள் ஆகியோரே நேற்று வன்னி திரும்பினர்.

# கண்காணிப்புக் குழு நடுநிலையாக நடந்துகொள்ள வேண்டும்

## வலிகாமம் பொதுஅமைப்புக்கள் ஒன்றியம்

(வலி.வடக்கு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பக்கச்சார்பின்றி நடந்துகொள்ள வேண்டும். தமது கடமைகளைச் சரியாகவும் நேர்மையாகவும் செய்ய வேண்டும் என வலிகாமம் கோட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மானிப்பாயில் நடந்த சம்பவம் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். இது மக்களைச் சினங்கொள்ள வைத்துள்ளது. சமாதான நடவடிக்கைக்குப் பங்கம் வரக்கூடாது என்பதற்காகவே மக்கள் அமைதியாக இருக்கின்றனர் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மானிப்பாய் அசம்பாவிதம்; புலிகளுடன் பேசப்படுமாம்

மானிப்பாய் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்தப்படும். அதேசமயம் நாட்டின் இறைமையை பாதுகாத்து சமாதானத்தை ஏற்படுத்தும் பொறுப்பு படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னரான செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எதிர்வரும் 18 முதல் 21 ஆம் திகதிவரை ஜப்பானில் நடக்கும் அடுத்த கட்டப்பேச்சில் நிதியாள்கை, அரசியல் தீர்வுப் பிரச்சினைகளும் பேசப்படும் எனவும் பீரிஸ் தெரிவித்தார்.

# விமானப்படைக்கு பயிற்சி இந்திய உதவி கோரப்படும்

இலங்கை விமானப்படை அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகளை வழங்குமாறு இந்திய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கிருஷ்ணசாமியிடம் கோரவிருப்பதாக விமானப்படையின் பேச்சாளர் சஜித் விஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருக்கும் இந்திய விமானப்படைத் தளபதி - ஜனாதிபதி மற்றும் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இவரது விஜயத்தில்- இலங்கையின் விமானப்படையினருக்கு இந்தியாவில் வழங்கப்பட்டுவரும் பயிற்சிகளை மேலும் அதிகரிக்குமாறும் கோரப்படவுள்ளது.

இவர், வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கும் விஜயம் செய்து, அங்கு விமானப்படைத் தளங்களைப் பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மாநகரசபை...

திகதி எல்லாம் அறிவிக்கப்பட்ட பின்னரும் இந்த இறுதி நேரத்தில் நேற்றும், நேற்றுமுன்தினமும் என்னை சிலர் சந்தித்து இத்திறப்பு விழாவை நடாத்த வேண்டாம் என நேரிலும் கடிதம் மூலமும் கேட்டுக்கொண்டனர்.

இது எனது தனிப்பட்ட விடயமல்ல. இவ்விடயத்தில் நான் மட்டும் முடிவெடுக்க இயலாது. முழு மாநகரசபை உறுப்பினர்களுடனும் கதைத்த பின்னர்தான் இது குறித்து முடிவெடுக்கலாம் என நான் அவர்களிடம் கேட்டுக்கொண்டேன்.

இறுதியில் இன்று (நேற்று) மாலை நாம் கூடித் தீர்மானித்ததன்படி யாழ். மாநகரசபையின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொது நூலகத்தினை யாழ். மாநகர சபையினரைத் திறக்க அனுமதிக்காமல் இருக்கும்போது, நாம் தொடர்ந்தும் இந்த மாநகரசபை பதவிகளில் இருப்பது எவ்வித பயனும் அற்றது. எனவே நாம் எமது பதவிகளை இராஜினமா செய்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது மாநகரசபை உறுப்பினர்களான த.முகுந்தன், மு.தவநாதன், செ.இருதயராஜன், மோ.எட்வேட், மா.கனகரத்தினம், க.கிங்ஸ்லி கணேசன், த.சுபத்திரன், ம.மங்களநேசன், கே.எம்.கமால்தீன் ஆகியோர் உடனிருந்தனர்.

இச்செய்தியாளர் மாநாட்டின் இறுதியில் மாநகர முதல்வர் உட்பட ஏனைய உறுப்பினர்கள் கையெழுத்திட்ட இராஜினாமா தொடர்பான கடிதத்தின் பிரதிகள் பத்திரிகையாளர்களிடம் விநியோகிக்கப்பட்டன.

# எரிபொருள் விலையேற்றம்; கைவிட அரசு தீர்மானம்

எரிபொருள் விலையுயர்வை தற்காலிகமாகக் கைவிட அரசு தீர்மானித்துளளது. இதனால் ஏற்படும் இழப்பை அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுபற்றி நிதியமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

விலையுயர்வுகள் மக்களைப் பாதிக்கும் என்பதால் விலையுயர்வினை தாமே பொறுப்பேற்றுக் கொள்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் சம்பந்தப்பட்ட எரிபொருட்களின் விலைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வதனால் அரசாங்கத்துக்கு 300 மில்லியன் ரூபா மேலதிக செலவினம் ஏற்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்த எரிபொருள் விலையுயர்வின் செலவினத்தை வேறு வழிகளில் பெற்றுக்கொள்ளவும் நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது. (01)

(முன்வந்த செய்தி உள்ளே)

## அனைத்துப் பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்

யாழ்.பல்கலைக்கழக அனைத்து பீடத்தையும் சேர்ந்த மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று, இன்று காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தருமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது.

# பெண் போராளிகள்...

போராளிகளும், அப்பாவிப் பொது மக்களும் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

சமீபத்தில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று கடற்புலிப் போராளிகளை இழந்து சோகத்தில் ஆழ்ந்திருக்கும் கட்டத்தில், மற்றுமொரு கொடூரச் சம்பவம் நேற்றுமுன்தினம் நிகழ்ந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் பெண் போராளிகள் எண்மரும் உதவச்சென்ற பொதுமக்களும் ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டி சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கோடு சிங்கள ஆயுதப் படையினர் திட்டமிட்டு இந்தச் செயல்களில் ஈடுபட்டுவருகிறார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து ஸ்ரீலங்காவின் பிரதமரிடமும், அமைச்சர்களிடமும், நோர்வே அரசாங்கத்திடமும் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளோம். இத்தகைய சம்பவங்கள் சமாதானப் பேச்சுக்களுக்கு பெரும் ஆபத்துக்களை ஏற்படுத்தும் என நாம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளோம் என்றார்.

இதேவேளை - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்படுகின்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவதற்கு படையினர் ஆட்சேபனை தெரிவித்து வருவதாகப் பேர்ளினில் நடைபெற்ற 5 ஆவது கட்டச் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்பட்டது.

அங்கு -

எமது பெண் போராளிகள் தாம் விரும்பியவாறு தமது ஆடைகளை அணிவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என விடுதலைப் புலிகள் தரப்பில் திருமதி அடேல் பாலசிங்கம் வாதாடினார். அதனை ஏற்றுக் கொண்ட அரச பிரதிநிதிகள் மிகவும் விரைவாக இது குறித்து சுமுகமான முடிவுக்கு வருவதாக வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆயினும் அதற்கிடையில் இந்த வன்முறைச் சம்பவம் நிகழ்ந்திருப்பது எமக்கு ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் அளிப்பதாகத் தெரிவித்த அன்ரன் பாலசிங்கம்,

இந்தச் சம்பவத்திலிருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது ஸ்ரீலங்காப் படையினர் எந்தக் கட்டுப்பாடுமின்றி தான்தோன்றித்தனமாக இனவாத உணர்வோடு ஈடுபட்டுவருகின்றனர். இவர்களை ஒழுக்கம், கட்டுப்பாட்டுடன் வைத்திருப்பது சிங்கள அரசின் பொறுப்பு. அல்லாதுவிடில் இன்றைய சமாதானச் சூழ்நிலையில் ஆபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாதென்றும் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

## லிப்ட்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வன்னிப் பிரதேசத்தில் மாணவர்களின் அவலங்களை நேரில் கண்டுவந்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர், இன்று அடுக்கு மாடிக்கு லிப்ட் வசதியும், குளிரூட்டி வசதியும், சிற்றுண்டிச்சாலை வசதியும் இல்லாது நூல் நிலையத்தைத் திறப்பதா? என்று கேட்பது சரிதானா? குப்பி விளக்கிலும் கொட்டில்களிலும் தமது கல்வியைக் கற்று உச்ச பதவி வகித்தவர்கள் எமது தமிழ்ச்சமூகத்தினர் என்பதை உணரவேண்டும்.

இந்த நூல் நிலையம் திறக்கக்கூடாது என ஆர்ப்பாட்டம் செய்பவர்களில், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தை மன்னிக்கலாம். ஆனால், ஆசிரியர் சங்கம் இதை ஆட்சேபிப்பது வேதனையான விடயம்.

எனது கோரிக்கையைப் பரிசீலித்து சூழ்நிலைக்கு ஏற்றவாறு முடிவெடுத்து நிகழ்வை ரத்துச்செய்த மாநகர முதல்வருக்கும் உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஆனந்தசங்கரி நேற்று கொழும்பில் பிரதமரைச் சந்தித்துப் பேசியுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மானிப்பாய்....

தெரிவித்ததுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்பதிகாரி ஒலே புரூண்டத்துடனும் பேச்சு நடாத்தினர்.

யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சூ.சிறில், பொது அமைப்புக்களின் சார்பில் மகஜர் ஒன்றினை ஒலே புரூண்டத்திடம் கையளித்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார். (லி)

## போராளிகள்...

டாக யாழ்.நகரப் பகுதிக்கு இக்கண்டனப்பேரணி சென்றதும், அங்கிருந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்துக்குச் சென்று மானிப்பாயில் படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து கண்டன மகஜர் ஒன்று கண்காணிப்புக்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளது.

# மரண அறிவித்தல்

## மந்துவில்

## சுந்தரம் சின்னத்தம்பி மாஸ்ரர்

(புராணிகர், முன்னாள் வரணி கிராமசபை அங்கத்தவர்)

மந்துவிலைச் சேர்ந்த சுந்தரம் சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் நேற்றுமுன்தினம் (12.02.2003) புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், லயன் டாக்டர் அருளானந்தம்(J.P), இளம்பிறைநாதன் (உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி, வடவலயம்), தேவமலர், யோகராசமலர் (ஆசிரியை), பொற்கிளி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவயோகம் (ஆசிரியர் - யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம்), கங்கேஸ்வரி, சபாபதிப்பிள்ளை (கணக்காளர், SVS, சாவகச்சேரி), சண்முகலிங்கம் (இளைப்பாறிய T.O), ஜேம்ஸ் ஏபிரகாம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், டாக்டர் அன்னவதனி (உதவி விரிவுரையாளர் - பேராதனை பல்கலைக்கழகம்), சுந்தரவதனி (விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), கஜவதன் (மொறட்டுவப் பல்கலைக்கழகம்), கோபிநாத் (லண்டன்), கோபிகா (மாணவி, பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர்மடம்), உலகநாதபிள்ளை, தேவராணி (ஆசிரியை, காரைநகர் யாழ்ரன் கல்லூரி), தீபா (சமுர்த்தி உத்தியோகத்தர் - சாவகச்சேரி), கபிலன் (பேராதனை பல்கலைக்கழகம்), ரூபா, நிசாந்தி, சோபனா (மாணவிகள் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை நேற்று (13.02.2003) வியாழக்கிழமை அன்று இல.45, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*நிரந்தர முகவரி:*
சாவகச்சேரி.

*தற்காலிக முகவரி:*
45, ஆடியபாதம் வீதி,
கொர்க்குவில் கிழக்கு.

தகவல்:
**லயன் டாக்டர் அருளானந்தம்,**
**இளம்பிறைநாதன்**
(AGM- மக்கள் வங்கி)

(244)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ளார் பரம்பரை ஜோதிடர், புகழ்பெற்ற

S.N.குமாரசாமி அவர்கள்.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றம் இன்மை மற்றும் எந்தப்பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ், இல.711, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ்.இந்துக்கல்லூரிக்கு அண்மையில் )

★ செவ்வாய் விடுமுறை (242)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.